பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :150

## வெள்ளை வானில் வந்தோர் வாள்வெட்டு: நெடுங்குளம் சந்தியில் மூவர் படுகாயம்!



வெட்டுக்காயத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர். (படம் : பசீர்)

### நேற்று முன்னிரவில் சம்பவம்

யாழ்ப்பாணம்.ஏப்.25

வெள்ளைவானில் வந்தவர்கள் சைக்கிளில் பயணம் செய்தவர்களை கண்டபடி வாளால் வெட்டிவிட்டு தலைமறைவாகினர்.

நேற்றிரவு 11 மணியளவில் அரியாலை நெடுங்குளம் சந்தியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் உள்ள உணவகம் ஒன்றில் இரவு உணவை அருந்திய ஆறு இளைஞர்கள் யாழ்.கண்டி வீதியில் - நெடுங்குளம் சந்திப் பகுதியில் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்தனர் என்றும் -

அச்சமயம் திடீரென வெள்ளை வானில் வந்திறங்கிய குழு ஒன்று தாம் கொண்டுவந்த வாள், கத்தி என்பனவற்றைப் பயன்படுத்தி சைக்கிளில் சென்ற இளைஞர்கள்மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தத் தொடங்கியது என்றும் - கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் சைக்கிளில் பயணம் செய்தவர்கள் எனக் கூறப்படும் ஆறுபேரில் மூவர் பலத்த வெட்டுக்காயங்களுக்கு இலக்காக, ஏனையோர் தப்பிவிட்டனர் எனத் தெரி

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியுடன் சந்திரிகா கடுமையாக நிற்க முடிவு!

## இன்று மாலை நடக்கும் சந்திப்பில் திட்டவட்டமான தீர்மானம் கிட்டும்

கொழும்பு,ஏப்ரல்25

**ஜே.வி.பியினர் உட்பட மேல் மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களை இன்று மாலை சந்திக்கவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கூட்டணி அரசாங்கத்திலுள்ள கட்சிகளின் கூட்டுப் பொறுப்புகள் குறித்து முக்கியமானதும், கடுமையானதுமான அறிவுறுத்தல்களை அங்கு வழங்குவாரென்று எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

இன்றைய கலந்துரையாடலின் விளைவாக ஆளுங்கட்சி கூட்டமைப்புக்குள் உள்ள குழப்பம் தொடர்பாகத் தீர்க்கமான - திட்டவட்டமான ஒரு முடிவு கிட்டும் என்றும் அந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பின் கைகளில் மேல் மாகாணசபை உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ள நிலையில் இன்று ஜே.வி.பியினர் உட்பட அச்சபையில் அங்கம் வகிக்கும் ஆளுந்தரப்பின் உறுப்பினர்கள் அனைவரையும் ஜனாதிபதி குமாரதுங்க சந்திக்கின்றார். (14ஆம் பக்கம் பார்க்க)

### ஜே.வி.பி. தலைவர்களின் முக்கிய சந்திப்பு இன்று

கொழும்பு.ஏப்.25

மேல்மாகாணசபை முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் குறித்தும், இது தொடர்பிலான ஜே.வி.பியின் இறுதி நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்குமாக ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களின் சந்திப்பு ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் தலைமையில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் மேல்மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேல்மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா இன்று மாலை சந்திக்கவுள்ள சூழ்நிலையில் இந்தச் சந்திப்பும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## மேல்மாகாண முதல்வருக்கு எதிரான நிலைப்பாட்டில் ஜே.வி.பி. விடாப்பிடி

கொழும்பு.ஏப்.25

மேல் மாகாணசபையில் ஸ்ரீ.ல.சு. கட்சியைச் சேர்ந்தவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சருமான ரெஜினோல்ட் குரேக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்படாதென்று ஜே.வி.பி. நேற்று உறுதியாகத் தெரிவித்தது.

இது தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க, ஒருவர் தவறு இழைத்திருந்தாரானால் அவர் அதற்குரிய பிரதிபலனை அனுபவிக்கவேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையென்று கூறினார்.

மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என அறிகிறோம். எமது

(14ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுப் பதவியேற்ற புதிய பாப்பரசர் அங்கு குழுமியிருந்த மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவதைப் படத்தில் காணலாம். பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் உரை நிகழ்த்துகிறார்(உள் படம்). (செய்தி 2ஆம் பக்கத்தில்)

### மர்மமான முறையில் காணாமற்போன

## இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் பற்றிய விசாரணையில் முன்னேற்றம் இல்லை

கொழும்பு.ஏப்.25



கல்கிசை தீவிரவாத புலனாய்வுப் பிரிவின் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரி.ஜெயரட்ணம்மர்மமான முறையில் காணாமற்போனமை தொடர்பான விசாரணைகளில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லையென்று பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார்.

அனைத்துப் புலனாய்வுத்துறைகள் ஊடாகவும் இந்த விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆனால், உருப்படியான துப்பு எதுவும் கிடைக்கவில்லையென்று குறிப்பிட்ட பொலீஸ்மா அதிபர் சர்வதேச ரீதியிலுள்ள புலனாய்வுத்துறைகள் ஊடாகவும் இவ்விடயம் குறித்து விசாரிக்கப்பட்டுவருவதாகவும் கூறினார்.

இதேவேளை, மேற்படி பொலீஸ் அதிகாரி காணாமற்போன விடயம் தொடர்பில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

இந்த விடயம் தொடர்பில் விடுதலைப் புலிகள் மீது சந்தேகிக்கப்படுவதால் அது குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுமென்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹோக்லண்ட் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

(எ-க)

## மே மாத இறுதிக்குள் பொதுக்கட்டமைப்பு: இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.25

அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து அமைக்க உத்தேசித்துள்ள பொதுக்கட்டமைப்பு அடுத்த மாத இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும் என்று இராஜதந்திரிகளை மேற்கோள்காட்டி வெளிநாட்டு செய்தி நிறுவனமான ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மின் விஜயத்தின் போது பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஒரு முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரால் ஜனாதிபதியைச் சந்திக்க முடியவில்லை.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இறுதி முடிவுகளை எட்டாமலேயே அவர் நாடு திரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஒருபோதும் எதிர்க்கவில்லை

## கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கிறிஸ்ரினா றொக்கா



கொழும்பு,ஏப்.25

விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஒருபோதும் எதிர்க்கவில்லை. புலிகளின் வன்முறைப் போக்கையே அமெரிக்கா எதிர்க்கிறது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமெரிக்காவின் தெற்காசிய விவாகாரங்களுக்கான ராஜாங்க உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா.

அண்மையில் தம்மைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பின் தூதுக்குழுவினிடமே அவர் இதனைத் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட்டால் அவர்களுடன் நல்லுறவைப் பேணுவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது என்றும் - அவர் தெரிவித்தார். தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். கடந்த மூன்று வருட கால யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியுடன் செயற்பட்டு வந்திருக்கின்றனர். ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என்று கிறிஸ்ரீனா ரொக்காவிடம் தாங்கள் தெரிவித்தார்கள் என்றும் சம்பந்தன் எம்.பி. கூறினார்.

இதற்குப் பதிலளித்த ரொக்கா புலிகளின் வன்முறையைத்தான் அமெரிக்கா எதிர்க்கிறது. புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஒருபோதும் எதிர்க்கவில்லை. புலிகள் வன்முறையை கைவிட்டால் அவர்களுடன் நெருங்கிப் பணிபுரிய முடியும் என்று கூறினார். இவ்வாறு சம்பந்தன் எம்.பி. மேலும் கூறினார்.

(த)

# எதிர்க்கட்சிகளுடன் ரணில் இன்று முக்கியமான பேச்சு

கொழும்பு,ஏப்.25

மேல் மாகாண சபையின் முதலமைச்சருக்கெதிராக மாகாணசபையின் - பிரதான - எதிர்க்கட்சி முன்வைத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ள சூழ்நிலையில் மாகாணசபையின் எதிர்க்கட்சியில் அங்கம்வகிக்கும் கட்சிப் பிரமுகர்களுடன் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்று பேச்சு நடத்தவுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவரான- மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கித்சிறி கஹட்டபிட்டிய மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேல்மாகாண மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களுடன் இந்தப் பேச்சு இடம்பெறவுள்ளது.

முன்னதாகக் கடந்தவார நடுப்பகுதியிலும் இவ்வாறான பேச்சை ஐ.தே.க. தலைவர் ரணில் நடத்தியிருந்தார். இன்று நடைபெறும் பேச்சின் போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கும் விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்படுவதுடன், இதற்கான ஆலோசனைகளையும் ஐ.தே.க. தலைவர் வழங்கவுள்ளார் எனக் கூறப்பட்டது.

(எ-க)

# இலங்கைக்கு உதவும் நாடுகளின் கண்டி மாநாட்டில் கிளின்டன்

## அடுத்த மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடக்கும்

கொழும்பு,ஏப்.25

அடுத்த மாதம் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பு மாநாட்டில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தெற்காசியப் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண நிதி சேகரிப்புக்காக அமெரிக்க அரசின் விசேட தூதுவராக பில் கிளின்டன் செயற்படுகின்றார்.

நேரடியாகவே இலங்கை வந்து ஆழிப் பேரலை அனர்த்தப் பாதிப்புகளையும் அகதிகளின் நிலைமைகளையும் கண்டு சென்றவர் கிளின்டன்.

கண்டியில் நடக்கும் உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பின் மாநாட்டில் இலங்கை அரசு முன்வைக்கப்போகும் அபிவிருத்தித் திட்ட அறிக்கை மற்றும் இதுவரை மேற்கொண்டுள்ள நிவாரணத் திட்டங்கள் என்பன இந்த மாநாட்டில் வைத்து விரிவாக ஆராயப்படவுள்ளன. மே மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறும் இந்த மாநாட்டில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியசபை உட்பட 40 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு வழமையாகவே பாரிஸ் அல்லது வாஷிங்ரன் போன்ற ஐரோப்பிய நாடுகளில் நடைபெறுவதுதான் ஒழுங்கு. ஆனால், இம்முறை முதன்முறையாக இது இலங்கையில் நடைபெறுகின்றது. இதனால் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது என நிதி அமைச்சின் சர்வதேச வழங்கல் மற்றும் நிதிப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணங்கள் தொடர்பான விடயங்கள் முக்கியமாகப் பரிசீலனை செய்யப்படும் என்றும் -

ஆனால், அதற்காக ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பாக மட்டும்தான் பரிசீலிக்கப்படும் என்பது அர்த்தமல்ல என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபா உதவிகள் தொடர்பாகவும் மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது. இந்த உதவிகளைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், இந்த மாநாடு இலங்கைக்கு சாதகமாகவே அமையும் என நிதி அமைச்சின் பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

(எ-க)

# சமய சந்நிதிகளில்

காரைநகர்,ஏப்.25

காரைநகர் கிழவன்காடு கந்தசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 6மணி தொடக்கம் 7.29 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

பூர்வாங்கக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின. பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும்.

தொடர்ந்து புதன்கிழமை காலை கும்பாபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (எ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.25

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்மாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் அடுத்த மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும் ஏழாம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை திருவூஞ்சல், கொடியிறக்கம் என்பனவும் நடைபெறும்.

(எ-12)

# மினிபஸ்ஸை எரித்தவர்களைத் தேடி கோப்பாய் பொலீஸார் வேட்டை

## பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.25

இருபாலையில் மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடி கோப்பாய் பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

இத்தகவலைத் தெரிவித்தார் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை இருபாலைச் சந்திக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மினிபஸ் விபத்தையடுத்து, மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலரது பெயர்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

கைதுசெய்யப்படுவோர் உடனடியாகவே நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளனர் என்றார் ஸ்ரீசெல்வம்.

(த-7)

# நேபாளத்திற்கு இராணுவ உதவிகளை மீண்டும் வழங்க இந்தியா சம்மதம் தெரிவிப்பு

ஜகார்த்தா,ஏப்.25

நேபாளத்திற்கு இராணுவ உதவிகளை மீண்டும் வழங்க இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடந்துமுடிந்த ஆசிய - ஆபிரிக்க உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நேபாள மன்னர் ஜியானேந்திரா பேச்சுகள் நடத்திய பின்னரே இராணுவ உதவிகளை மீண்டும் வழங்க இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த நூறு தலைவர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் கலந்துகொண்ட நேபாள மன்னர் ஜியானேந்திரா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கலந்துரையாட விருப்பம் தெரிவித்தார்.

இதனையடுத்து இருவரும் கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் -

இரு தலைவர்களுக்கிடையேயான பேச்சு சுமார் 40 நிமிடங்கள் இடம்பெற்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், நேபாளில் விரைவில் ஜனநாயக ஆட்சிமுறை மலரவேண்டும் எனப் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார். மேலும், மாவோ தீவிரவாதிகளை ஒடுக்க இந்தியா மீண்டும் உதவிகளை வழங்க அவர் சம்மதம் தெரிவித்தார் என கலந்துரையாடல் நிறைவுற்றபின்னர் மன்னர் ஜியானேந்திரா செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

இராணுவ உதவிகுறித்த நேபாள மன்னரின் வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்.

தீவிரவாதிகளை ஒடுக்குதல் மற்றும் அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது என இந்திய வெளிவிவகாரத்துறைச் செயலாளர் ராஜிங் சிகரி செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

பிரதமர் ஹேர்பகதூர் டுபா தலைமையிலான அரசைக் கலைத்து, மன்னர் ஜியானேந்திரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுடன், நாட்டில் அவசரகால நிலைமையையும் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து இந்திய அரசு நேபாளத்துக்கு வழங்கிவந்த இராணுவ உதவிகளை நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

# இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் நிரந்தர அமைதி நிலவ அக்கறைகாட்டவேண்டும்

## பாக். ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்.25

இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பிரச்சினை தீர்ந்து நிரந்தரமான அமைதி ஏற்பட இருநாடுகளும் உண்மையான அக்கறை காட்டவேண்டும். துணிவு, விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும் - இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் ஆரம்பமான ஆசிய - ஆபிரிக்க உச்சிமாநாட்டில் உரையாற்றும்போதே முஷாரப் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் தொடர்ந்தும் கூறியதாவது:-

அரசியல் ஸ்திரத்தன்மை என்பது பொருளாதார ஒத்துழைப்பு, சமூக, கலாசார நல்லுறவு ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

தற்போது இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் நல்லுறவு வலுப்பெற்று வருகிறது.

ஆப்கானிஸ்தானிலும் மறுவாழ்வு, சீரமைப்பு, அமைதி ஏற்பட பாகிஸ்தான் முழு ஆதரவளித்துச் செயற்பட்டு வருகிறது - என்று கூறினார்.

இதேவேளை -

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் பகுதியையும் பாகிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் பகுதியையும் இணைத்து ஏழாகப் பிரித்தால், காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கலாம் என பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சி.என்.என். தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் முழுவதையும் ஏழு பகுதிகளாகப் பிரித்து அடையாளம் காணவேண்டும். பின்னர் இருநாடுகளுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டு அப்பகுதியிலுள்ள இராணுவத்தை வாபஸ்பெறச் செய்யவேண்டும்.

அதன்பின்னரே அந்தப் பகுதியின் ஆட்சியின் தன்மையை மாற்றியமைக்கவேண்டும்.

இவற்றை நிறைவேற்ற அப்பகுதியில் இராணுவம், தீவிரவாதம், விடுதலைப் போராட்டம் அனைத்தையும் இல்லாதொழிக்கவேண்டும் - நிறுத்தவேண்டும்.

காஷ்மீர் மக்கள் அவர்களது பாதுகாப்பை அவர்களே கவனித்துக்கொள்ளவேண்டும்.

காஷ்மீர் பிரச்சினை தற்போது மக்கள் கைக்குச் சென்றுவிட்டது. எப்படியாவது அதனைத் தீர்க்கவேண்டும் என அவர்கள் முனைப்பாக இருக்கின்றனர்.

காஷ்மீர் பிரச்சினை அரசுகள் மற்றும தலைவர்களை அது கடந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

(ஐ-க)

# பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் நேற்று உத்தியோகபூர்வ பதவியேற்பு

வத்திக்கான்,ஏப்.25

உலகிலுள்ள 110 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களது புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 16ஆவது ஆசீர்வாதப்பர் அவரது பாப்பரசர் பதவியை நேற்று சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

புதிய பாப்பரசரின் பதவியேற்பு நிகழ்வில் உலக நாடுகளின் தலைவர்களான அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் சகோதரரும் அமெரிக்க புளோரிடா மாநில ஆளுநருமான ஜெப் புஷ், இத்தாலி பிரதமர், ஜேர்மன் அதிபர் உட்பட 5 லட்சம்பேர் கலந்துகொண்டனர் என வத்திக்கான வட்டாரங்கள் தெரிவித்தன.

பதவியேற்புக்கு முன்னர் விசேட பிரார்த்தனைகளும் நேற்று சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் இடம்பெற்றன.

பதவியேற்பு நிகழ்விற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட புதிய பாப்பரசருக்கு கர்தினால் ஒருவர் சிறப்பு மோதிரம் அணிவித்தார்.

பின்னர் மற்றுமொரு கர்தினால் வெள்ளைக் கம்பளியினாலான 6 சிலுவை அடையாளங்கள் பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய பாப்பரசர் கிரீடத்தை தானே சூடிக்கொண்டு தனது பாப்பரசர் பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

பின்னர் விசேட பிரார்த்தனையிலும், பதவியேற்பு நிகழ்விலும் பங்கேற்ற மக்களுக்கு புதிய பாப்பரசர் ஆசீர்வாதம் வழங்கினார்.

(ஐ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# விடுதலைக்கு வழிகாட்டும் பேரினவாதச் சக்திகள்

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தை சற்று உற்று நோக்குபவர்களுக்கு ஒரு விடயம் நன்கு தெரியவரும்.

அஹிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் இப்போது ஆயுத வழிக்குத் திரும்பித் தீர்க்கமான ஒரு கட்டத்தை அடையும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. தமிழர்களின் தனியரசு இன்னும் பிறக்கவில்லை. ஆனால், தனியான - பெரிய - நிலப்பிராந்தியம் ஒன்றைத் தமிழ்ப் போராளிகள் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்து நிர்வாகம் நடத்தும் அளவுக்கு - தனியரசுக்கான ஆரம்பக் கட்டுமான அளவுவரை - தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முன்நகர்ந்துள்ளது.

இந்தப் பாதையில் தமிழர் ஆற்றிய பங்கு, ஈகம், சேவை என்பவை ஒரு புறமிருக்க, இந்தப் போராட்டத்தை உந்தி முன்தள்ளிவிட்டதில் பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்குக் கணிசமான பங்கு உண்டு என்பது, இப்போராட்ட வரலாற்றைக் கவனிப்பவர்களுக்கு நன்கு புலப்படும்.

தமிழரின் உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு என்னென்ன தேவையோ - அவையாவற்றையும் - அந்தந்தக் காலகட்டத்தில் - ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சிங்களப் பேரினவாதம் பின்நின்றதே இல்லை.

விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலகட்டத்தில், தமிழ் இளைஞர்களை ஆயுதப்போராட்டக் குழுக்களின் வழிக்குத் திசை திருப்பிவிட்டதில் தமிழர் தரப்பின் பிரசாரங்களைவிட, பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் செயல்கள் தாம் முக்கிய இடத்தைப் பெற்றன.

அன்று முதல் இன்றுவரை, இப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்று ஏற்படவிடாமல் அவ்வப்போது முட்டுக்கட்டைகளைத் தவறாது போடுவதன் மூலம், சர்வதேச மட்டத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி, அதை வெற்றிகரமான திசையில் முன்நகர்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி இதுவிடயத்தில் தன் பங்கு, பணியைச் 'சிறப்பாக' ஆற்றி வருகின்றது பேரினவாதம்.

பெரும்பான்மைச் சிங்களவர்களின் இரண்டு பெரும் கட்சியினரும் (ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்) தமக்குள் உள்ள வேறுபாடுகளைத் தள்ளிவைத்துவிட்டு - இலங்கைத் தீவின் தேசிய நலன் கருதி - இணக்கமான தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு முன்வைப்பார்களேயானால், இந்த ஐந்து தசாப்த கால இனப்பிரச்சினை ஒரே நாளில்முடிவுக்கு வந்துவிடும். நியாயமான - ஈழத்தமிழர்களின் அபிலாசைகளை நிறைவு செய்கின்ற - ஒரு தீர்வுத் திட்டத்தை அக் கட்சிகள் இரண்டும் சேர்ந்து முன்வைத்தால், ஈழத்தமிழர்கள் தங்களின் விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு, அத்தீர்வை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற கட்டாயத்துக்குத் தள்ளப்படுவார்கள். ஆனால், சிங்களப் பெரும்பான்மையினரின் கட்சிகள் அதனைச் செய்யப்போவதில்லை. அதுவே, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு வலுவூட்டும் முதல் காரணியாகும்.

அடுத்தது, அவ்வப்போது ஆட்சிக்குவரும் பெரும்பான்மை இனக் கட்சிகளில் ஏதாவது ஒன்று, களநிலைமைகளின் கட்டாயம் கருதி - இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதைத் தவிர வேறுவழியில்லை என்ற இக்கட்டுநிலை காரணமாக - தீர்வுக்கு முயற்சிக்கும். அதை எதிரணியில் இருக்கும் மற்றைய பேரினவாதக் கட்சி எப்பாடுபட்டேனும் - மேலாண்மைவாதப் போக்கை எந்த மட்டத்தில் கடைப்பிடித்தேனும் - குழப்பிவிடும். இது ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி அதற்கு வலுவூட்டும் அடுத்த காரணி.

இந்த இரண்டாவது காரணியில் தற்போது சிறிய மாற்றம் அவ்வளவுதான்.

எதிரணியில் இருந்துகொண்டு தீர்வு முயற்சிகளைக் குழப்பும் சிங்கள - பௌத்த பேரினவாதம் இப்போது ஜே.வி.பி. வடிவில் ஆளும் தரப்புக்குள்ளும், ஜாதிகஹெல உறுமய வடிவில் எதிர்த்தரப்புக்குள்ளும் இருந்து கொண்டு இருபக்கங்களிலுமே இருந்தபடி - தீர்வு முயற்சியைக் குழப்பி வருகின்றன.

அதன்மூலம் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி அதற்கு வலுவூட்டுகின்றன அவை.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானத்துக்காக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து ஏற்படுத்த உத்தேசித்த பொதுக்கட்டமைப்பு, தீர்வு முயற்சிகளுக்கான முதற்படியாகவும், அதிகாரப்பகிர்வுக்கு வழிகோலும் பூர்வாங்க அமைப்பாகவும் கருதப்பட்டது.

அந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்படவிடாமல் தடுப்பதன் மூலம் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி, வலுவூட்டும் தனது கைங்கரியத்தைப் பேரினவாதம் தொடர்ந்து கனகச்சிதமாக நிறைவேற்றுகின்றது. அவ்வளவே.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வாயிலாக அவர்களுக்கு ஒரு தனிநாடு கிடைத்தால் அதைப் பெற்றுக்கொடுத்த பெருமையில் கணிசமான பங்கு சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கே உரியதாக இருக்கும் என்பது மறுக்கப்படமுடியாத உண்மையாகும்.

# கடைகளின் முன்னால் அமைக்கப்பட்ட தாழ்வாரக் கூரைகள் அகற்றப்பட்டன!

## மாநகரசபையினர் நகரில் அதிரடி

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியில் கடைகளுக்கு முன்பாக - வீதி ஓரத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருந்த தாழ்வாரக் கூரைகளை கலகம் அடக்கும் பொலீஸாரின் உதவியுடன் யாழ்.மாநகரசபையினர் நேற்று அகற்றினர்.

மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளின் கூரைகளே அகற்றப்பட்டன.

போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருக்கும் கூரைகள் தொடர்பாக யாழ்.மாநகர சபையினால் பல தடவைகள் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வந்ததாக மாநகரசபைவட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இந்தத்தாழ்வாரக்கூரைகளை அகற்றுவதற்குச் சபையால் வழங்கப்பட்டிருந்த இறுதிக்காலக்கெடு முடிவடைந்துவிட்ட போதிலும் கடை உரிமையாளர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக்காலை பொலீஸாருடன் அப்பகுதிக்கு வந்த யாழ்.மாநகரசபை ஊழியர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த கூரைகளை அகற்றினர்.

அகற்றப்பட்ட கூரைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றி யாழ்.மாநகரசபைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (து-7)




நேற்றுக்காலை மின்சார நிலைய வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கபட்டிருந்த தாழ்வாரக் கூரைகளை யாழ்.மாநகரசபை ஊழியர்கள் அகற்றிய போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: பிரபா)

# புலனாய்வு அதிகாரியைத் தேடுமாறு யாழ்.பொலீஸாருக்கும் உத்தரவு!

காணாமற்போன கல்கிசைப் பொலீஸ் பிரிவின் புலனாய்வுத்துறை இரண்டாவது நிலை அதிகாரியான இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தை தேடிக்கண்டுபிடிக்குமாறு பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ யாழ்.குடாநாட்டுப் பொலீஸாருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி கல்கிசையில் உள்ள விடுதி ஒன்றில் இரவு விருந்தில் கலந்துகொண்டபின் நெருங்கிய நண்பர்கள் சிலருடன் வாகனம் ஒன்றில் அவர் புறப்பட்டுச் சென்றார் என்றும் - அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

காணாமற்போன இவரைக் கண்டுபிடிக்குமாறு யாழ்.குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்கும் பொலீஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று யாழ்.பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - இலங்கையிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(து-7)

# மாநகரசபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு 2 ஆம் கட்டத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.25

மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு 2 ஆம் கட்ட விசர் நோய்த் தடுப்பு ஊசி போடப்படவுள்ளது.

தடுப்பூசி போடப்படும் திகதி, நேரம், இடம் பற்றிய விவரங்கள் வருமாறு-

கொழும்புத்துறைப் பகுதியில் நாளை செவ்வாய்க்கிழமை - காலை 8 மணிக்கு ஆனந்தன் வடலி சென்.சூமாரிஸ் தேவாலயம் அருகில் - முற்பகல் 10.30 மணிக்கு சுவாமியார் வீதி ஆரம்ப சுகாதார நிலையம் பிற்பகல் 2 மணிக்கு பாஷையூர் சிறுவர் பூங்கா.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு ஈச்சமோட்டை ச.ச. நிலையம், முற்பகல்10.30 மணிக்கு கொய்யாத்தோட்டம் ச.ச.நிலையம். பிற்பகல் 2 மணிக்கு கலைச்சுடர் ச.ச.நிலையம்.

28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கொழும்புத்துறை வீதி சந்தன மாதா கோயிலடி, முற்பகல் 10.30 மணிக்கு கண்டி வீதியிலுள்ள செஞ்சிலுவைச்சங்க யாழ்.அலுவலகம், பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபம்.

வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளை தவறாது போடுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (து-204)

## நெடுந்தீவுப் பிரதேசத்தில்

# பாரிய தொட்டியை அமைத்து மழைநீரைச் சேகரிக்க முடிவு!

நல்லூர்,ஏப்.25

நெடுந்தீவில் மழை நீரைத் தேக்கி வைப்பதற்காக தொட்டி ஒன்றை அமைப்பதற்கு நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் பிரதேச செயலகத்தில் கடந்த 21 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

'நியாப்' திட்டத்தின் உதவியுடன் மழை நீரைத் தேக்கி வைப்பதற்கான தொட்டியை அமைக்கத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக நடவடிக்கை எடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

நெடுந்தீவுப் பகுதியில் மாரி காலங்களில் பெய்யும் மழை நீரின் பெரும்பகுதி வாய்க்கால் வழியாக கடலுக்குச் செல்கிறது.

மக்கள் வீதிகளை வெட்டி மழை நீரைக் கடலுக்கு விடுவதால் வீதியும் சேதமடைகின்றன.

இயற்கை உரங்களும் மழை நீருடன் கடலுக்கு அடித்துச் செல்லப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்தே, மழை நீரை பாரிய தொட்டியில் சேகரித்து வைத்துப் பயன்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. (து-111)

## செம்மணிப் பகுதியில் அமைந்திருக்கும்

# யாழ்.வரவேற்பு வளைவு புது மெருகூட்டப்படுகின்றது

சாவகச்சேரி,ஏப்.25

ஏ-9 வீதியில், செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள யாழ்.வரவேற்பு வளைவு புதுக்கிச் செப்பனிடப்படுகிறது.

'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்று எழுதப்பட்ட இந்த நுழைவாயில் வளைவை யாழ்.மாநகரசபை வர்ணம் பூசி மெருகூட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் போது குண்டடிபட்டு சேதங்களுடன் காணப்படும் இந்த வளைவின் உச்சியில் யாழ்.வீணைச் சின்னமும் முன்பு அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அதனை மீள அமைத்து வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது.(ஐ-31)

## உதயவாக்கு

தோல்விகளை இயல்பாகவும் இன்முகத்தோடும் ஏற்றுக்கொள்வது தான் வெற்றியின் ரகசியம்.

டாக்டர் எம்.ஆர்.கோம்மேயர்.

## நாளை

சித்திரை 13
செவ்வாய்க்கிழமை
26.04.2005
திதி : துதியை
பிற்பகல் 01.44 வரை
நட்சத்திரம் : விசாகம்
முற்பகல் 08.32 வரை
சுபநேரம் : 10.29 - 11.59
ராகுகாலம் : 02.59 - 04.29
(யாவும் பழைய நேரப்படி)

# வண்ணாத்திப் பாலத்தை செப்பனிடும் பணி ஆரம்பம்

சாவகச்சேரி,ஏப்.25

தென்மராட்சிப் பிரதேசத்தையும் வலிகாமம் கிழக்குப் பகுதியையும் இணைக்கும் வீதியான சாவகச்சேரி - புத்தூர் வீதியில் உள்ள பிரதான பாலமான வண்ணாத்திப் பாலத்தைச் செப்பனிடும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பாலத்தை செப்பனிட சுமார் 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய பாலங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தப் பாலத்தினூடாக கடந்த 96 ஆம் ஆண்டுக்கு முன்னர் 775 ஆம் பாதையில் பஸ் சேவையில் ஈடுபட்டு வந்தது.

இப்பாலம் சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் இராணுவ நடவடிக்கையின் போது குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டது.

இதனைச் செப்பனிட வசதியாக பனங்குற்றிகள் மண்மூடைகள் கொண்டு தற் காலிக பாலம் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் தற்காலிக பாலமும் சேதமடைந்தது.

(து)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கார் விற்பனைக்கு

ஒருகைப் பாவனையில் உள்ள 13 SRI தொடர் இலக்கமுடைய NISSAN SUNNY வெள்ளை நிறக் கார் (குளிரூட்டப்பட்டது), ஒருகைப் பாவனையில் உள்ள 4 SRI தொடர் இலக்கமுடைய MORRIS MINOR கார் (கறுப்பு) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிறேமஸ்ரன், கொடிகாம வீதி, நெல்லியடி, T.P.: 021 2263208.

(44597)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட, **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 25.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக் கோட்டை. சந்நிதி பாம் - தொண்டைமானாறு. ஐங்கரன களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி. நல்லூர் பாம் சென்ரர் - நல்லூர்.

(44267)

## மணமகள் தேவை

யாழ.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 39 வயது, உயர்நிலைக் கனேடியப் பட்டதாரிக்கு 29 - 33 வயதிற்கு இடைப்பட்ட மணப்பெண் தேவை. மணமகன் கனேடியக் குடியுரிமை பெற்றவர் (தென்மராட்சி விரும்பத்தக்கது). தொடர்பு: திருமதி இ.சரவணமுத்து, திருமதி த.சின்னையா பிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு, T.P.: 077-9084848 aasai 33 @ yahoo.ca

(44586)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, 1980 ஆம் ஆண்டு புனர்பூசம், 4ஆம் பாதம், கிரகபாவ சங்கியை 91¾ எட்டிற்செவ்வாய் உள்ள ஆஸ்திரேலியாவல் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மணமகளுக்கு தகுதியான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை, இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (44619)

இந்து கௌரவ குடும்ப, 1982 ஆம் ஆண்டு, பூர நட்சத்திரம், கிரக பாவ சங்கியை, 24¾ செவ்வாய் தோஷமற்ற ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மணமகளுக்கு தகுதியான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமணசேவை, இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(44618)

## பெற்றுக்கொள்ளவும்

21.04.2005 வியாழக்கிழமை முகமாலையிலிருந்து யாழ்பாணம் வந்த வானில் உடுபுடைவைகள் அடங்கிய பயணப்பை ஒன்று கண்டெடுக்கபட்டுள்ளது. இதைத் தவறவிட்டவர்கள் சித்தனகேணிச் சந்தியிலுள்ள விநாயகர் கொமினிக்கேஷனைச் சேர்ந்த கு.பாலகிருஷ்ணனுடன் தொடர்பு கொண்டு ஆதாரங் காட்டிப்பெற்றுக்கொள்ளவும். (44601)

## இமயம் நாடகநூல்

சனிக்கிழமை தேசிய சேவையில் "அவசரக் கல்யாணம்" நாடகம் கேட்டீர்களா? 400 நாடகங்கள் எழுதிய கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 11 நவீன நாடகங்கள் கொண்ட நூல் "இமயம்". (44621)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

(42-14-18) (F 43495)

## மின்விநியோக வேலைகள் ஸ்தம்பிதம்

நல்லூர்,ஏப்.25

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விநியோக வேலைத் திட்டங்கள் ஸ்தம்பிதமடைந்திருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின் கம்பங்களை நாட்டுவதற்கான குழிகள வெட்டப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் அடுத்த கட்ட வேலைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று மக்கள் கவலை தொிவிக்கின்றனர். இது தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

(த-111)

## நெஞ்சை விட்டகலாத 5 ஆம் ஆண்டு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1927 - 07 - 19 | 2000 - 04 - 25 |

**அமரர் அன்ரனி பெர்னாண்டோ**

(இளைப்பாறிய அதிபர்)

எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்காய் இருந்த பப்பாவே!
நோய் நொடியின்றி நொடிப் பொழுதில் சென்று
ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டதே பப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எமது அணையாத தீபமாய் நீர் ஒளி வீசுவீரே!

ஆர்க்லேன், உடுவில். **அன்பு மனைவி,பிள்ளைகள்.**

(44620)(39-14-18-42)

## 3 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்

**25.04.2005**

**ஷானுஜா**



பானுகோபன்–சித்திராதேவி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஷானுஜா அவர்கள் இன்று (25.04.2005) திங்கட்கிழமை தனது மூன்றாவது பிறந்த தினத்தைத் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை உறவினர்கள் யாவரும் வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றனர்.

இல.31, கடையிற்சுவாமி வீதி, யாழ்ப்பாணம். (44608)(51-18-14)

**தகவல்: அம்மா - திருமதி சி. பானுகோபன், அம்மம்மா: ராதாம்பிகை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**

**கதிரவேலு தம்பையா**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12-07-1925 | 06-05-2004 |

*ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள்*
*உருவம் மட்டும் நெஞ்சைவிட்டு மறையவில்லை*
*உங்கள் நினைவுடனேயே நாமிங்கு வாழ்கிறோம்*
*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை*
*வேண்டுகிறோம்.*

மீசாலை மேற்கு, மீசாலை. (44596)(26-14-18-42)

**- குடும்பத்தினர்.**




சிவமயம்

சீர்மேவு சுன்னாகம் மயிலணி

அருள்மிகு மனோன்மணி அம்பிகை சமேத அண்ணமகேஸ்வரர் ஆலய

# பூங்காவனத் திருவிழா

**அடியார்களே!**

**ஆலயத்தில் இன்று (25.04.2005) திங்கட்கிழமை இரவு 10.00 மணிக்கு**

**ஆலய இந்து இளைஞர்களால்**

**ஒழுங்கமைக்கப்பட்ட**
**விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரியும்**

**இந்தியாவின் தேனிசைத் தென்றல் தேவாவுடன்** பணியாற்றி

**நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.மண்ணில்**
**முதன்முதலாக ஈழத்து முன்னணிப் பாடகர்களுடன்**
★ சத்தியசீலன் ★ திருமலை சந்திரன்
★ வவி ★ ஈழத்து மனோ (சுபேந்திரன்)
கிருபா ஆகியோர் இணைந்து வழங்கும்

யாழ்.ரமணனின் **ராஜன்ஸ் இசைக்குழுவினரின்**

**பிரமாண்டமான**

**இசைநிகழ்ச்சியும்**

இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**ஆலய இந்து இளைஞர்கள்**
(மயிலணி -சுன்னாகம்)

**விளம்பர அனுசரணை:**

**மிலேனியம் பெஷன் அன்ட் பொம்பே பஜார்**
10, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை, யாழ்ப்பாணம். 021-4590174.

**ஜெசிமா பிக்சர் பலெஸ்**
302, 304, 308, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.021-222 3124.

(44587)(50-14)



# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஎண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infornation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

## தென்மராட்சி உதைபந்தாட்டம்

# வளர்மதி, விக்நூட அணிகள் பிரதேசச் சம்பியன்களாகின

வலி.வடக்கு,ஏப்.25

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இறுதிப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் நாவற குழி விக்பூட் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் மிகவும் திறமையாக விளையாடின. மிகவும் நெருக்கமாக விக்பூட் விளையாட்டுக் கழகம் விளையாடியது. ஆனாலும், வளர்மதி விளையாட்டுக் கழக முன்னணி வீரர் பகிர்தாஸ் இடது பக்க வீரன் இராஜ்குமாருக்கு தட்டிக் கொடுத்த பந்தை மிகவும் நேர்த்தியாக எதிரணியினரின் கோல் கம்பத்தினுள் அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் நாவற்குழி விக்பூட விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் சுமாராக இருந்த போதிலும் விக்பூட விளையாட்டுக் கழக வீராங்கனை தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

ஆட்டமுடிவில் நாவற்குழி விக்பூட் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

முதல் தடவையாகத் தென்மராட்சிப் பிரதேசத்தில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-86)

### இன்றைய ஆட்டங்கள்

தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ். உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் ஆதரவுடன் புத்தூர் எவெறெஸ்ற் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பி.ப. 4 மணியளவில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

மாலை 4மணி - கண்ணகி வி.க. எதிர் யங்கம்பன்ஸ் வி.க., மாலை 5மணி - விக்னேஸ்வரா வி.க. எதிர் மனோகரா வி.க. (3-190)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணியளவில் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள அரை இறுதியாட்டத்தில் ஜொலி போஸ் வி.கவும் பல்கலைக்கழக வி.க.வும் மோதவுள்ளன. (3-190)



தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் போது தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.மாதுளன், வலிகாமம் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் விளையாட்டு அலுவலர் சதீஸ்குமாரினால் வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும் - ஆட்டத்தின் ஒரு காட்சியையும் - படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## யாழ். பிரதேச பெண்கள் உதைபந்தாட்டம்

# குருநகர் தொடர்மாடி அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ். பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடந்த பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் தொடர்மாடி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.



இரு அணி வீரர்களும் கடுத்தாடும் காட்சி.

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற போட்டியில் குருநகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொடர்மாடி விளையாட்டுக் கழகம் மோதியது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலைபந்தாட்ட பயிலுநர் திருமதி ஏ.எப். றூபசிங்க வீராங்கனைகளுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

தொடர்மாடி விளையாட்டுக்கழகம் எதிர்த்தாடிய குருநகர் விளையாட்டுக்கழக அணியை 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்மாடி விளையாட்டுக்கழக வீரங்கனை கே.அன்ரனிற்ற தனது அணிக்காக இரண்டு கோலினைப் பெற்றுக்கொடுத்து அநேகரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

இப்போட்டிக்கு பிரதம நடுவராக ரி.சுரேத்திரனும் உதவி நடுவர்களாக என்.விஜயஆனந்தன், ஏ.அஜித் ஆகியோர் கடமையாற்றினர்.

யாழ். பிரதேச விளையாட்டு அலுவலர் செ. ரமணன் போட்டியை ஒழுங்குபடுத்தினார்.(3-190)

விளையாட்டு

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 17, 19 வயதுப் பிரிவுகளில் மாவட்ட சம்பியன்

யாழ. மாவட்ட் பாடசாலை அணிகளுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரு பிரிவுகளில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனானது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடந்த இறுதியாட்டங்களில் 15, 17, 19 ஆகிய பிரிவுகளில் இறுதியாட்டங்களுக்குத் தெரிவான அணிகள் பங்குபற்றின.

ஆட்டங்களில் வெற்றியீட்டிய பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு.

**15 வயதுப் பிரிவு**

ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை.

**17 வயதுப்பிரிவு**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்.

(3-152)

# மானிப்பாய் பரிஷ் வி.கழகம் அரியாலை வி.கவை வென்றது

வலி.வடக்கு,ஏப்.25

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 30 ஓவர்கள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் பரிஷ விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 7 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஓவர்கள் முடிவடைந்தன.

கிருபா ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் ரஞ்சித்குமார் 28 ஓட்டங்களையும், காந்தி 25 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாக தமது அணிக்காகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக வீரர்களான சாத்வீகன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கவாஸ் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 3 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஒரு ஓட்டத்தினாலும் 7 விக்கெட்டுக்களினாலும் வெற்றிபெற்றது.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக வீரர்களான இராஜ் 72 ஓட்டங்களையும் சாத்வீகன் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் ஆகக்கூடிய ஓட்டங்களாகத் தமது அணிக்காகப் பெற்றுக்கொண்டனர். (3-86)

# கோப்பாய் கோட்டத்தின் பெண்கள் பிரிவு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடந்த மெய்வன்மைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெண்கள் பிரிவில் 11வயது, 13வயது, 15வயதுப் பிரிவுகளின் முடிவுகள் ஏற்கனவே உதயனில் வெளியாகியிருந்தன.

17வயது, 19வயதுப் பிரிவுகளின் முடிவுகள் வருமாறு:-

### 17வயதுப் பிரிவு

**100 மீற்றர்** - வி.ஜெனோரா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வீ.சுமங்கலி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), ஏ.சாளினி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.).

**200 மீற்றர்** - பீ.சுமங்கலி (நடராஜ இராமலிங்க வித்தி.), கேரஜீனா (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தி.), கே.சுபாசினி (அத்தியார் இந்துக் கல்லூரி).

**400 மீற்றர்** - கே.ரஜீனா (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தி.), எஸ்.திரோஜா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), எம்.சிந்துஜா (புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி).

**800 மீற்றர்** - கே.ரஜீனா (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தி.), எஸ்.சோபினி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), ரி.சுதர்சினி (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**1500 மீற்றர்** - ரீ.சுதாஜினி (அச்சுவேலி மத்திய கல்லூரி), எஸ்.திரேசனா (நடராஜா இராமலிங்க வித்தி.), எஸ்.சோபினி (நடராஜா இராமலிங்க வித்தி.).

**நீளம்பாய்தல்** - எஸ்.பபிலாசினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), பீ.சுமங்கலை (நடராஜ இராமலிங்க வித்தி.), கே.குகதர்சினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - எஸ்.பபிலாசினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஜே.சர்மிகா (இடைக்காடு ம.வி), எஸ்சிந்து (ஊரெழு கணேசா வித்தி.).

**குண்டெறிதல்** - ஜே.டக்ஸிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.சாந்தலோஜினி (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஆர்.நிரோஜனா (உரும்பிராய் சந்திரோதயா வித்தி.).

**தட்டெறிதல்** - ஜே.டக்ஸிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.தபிலா (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தி.), கே.துஸாந்தினி (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தி.).

**ஈட்டியெறிதல்** - ஏ.மேரி செந்தூரா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), எஸ்மேரி ஜென்சிகா (கோப்பாய் ம.வி.), என்.கிரிஜா (உரும்பிராய் இந்துக் கல்லூரி).

**4X100 மீற்றர் அஞ்சல்** - ஆவரங்கால் நடராஜ வித்தி., இடைக்காடு ம.வி.

**4X400 மீற்றர்** - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நடராஜ இராமலிங்க வித்தி.

### 19வயதுப் பிரிவு

**100மீற்றர்** - பி.சரண்யா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எம்.ச்ர்வானந்தி (புத்த கலட்டி சிறி விஸ்ணு வித்தி.), பீ.சிந்துஜா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி),

**200மீற்றர்** - கே.மீரா (அச்சுவேலி மத்திய கல்லூரி), ரீ.சிந்துஜா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), பீ.துளசிகா (ஆவரங்கால் நடராஜ இரமலிங்க வித்தி).

**400மீற்றர்** - கே.மீரா (அச்சுவேலி மத்திய கல்லூரி), எம்.சுகிர்தா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), பீ.சரண்யா (கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி).

**800மீற்றர்** - ஆர்.சுபாஜினி (அச்செழு சைவப் பிரகாச வித்திய), எஸ்.சுதர்சனா (இடைக்காடு ம.வி.), ஏ.சரிதா (வாதரவத்தை விக்கினேஸ்வரா).

**1500மீற்றர்** - ஆர்.சுபாசினி (அச்செழு சைவப் பிரகாச வித்தி.), எஸ்.சுபதா (அச்சுவேலி மத்திய கல்லூரி), ஆர்.றதீஸ்வரி (அச்செழு சைவப் பிரகாச வித்திய),

**நீளம்பாய்தல்** - பீ.சரண்யா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), கே.யாழினி (சோமாஸ்கந்தக் கல்லூரி), கே.மீரா (அத்தியார் இந்துக் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - என்.தர்சிகா (சோமாஸ்கந்தக் கல்லூரி), எம்.மேனகா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), பீ.பிஜிந்தா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**குண்டெறிதல்** - எஸ்.ரசிதா (வாதரவத்தை விக்கினேஸ்வரா), எஸ்.தர்சிகா (சோமாஸ்கந்தக கல்லூரி), ா.ருக்சி அன்சியா (கோப்பாய் கிறிஸதவக் கல்லூரி).

**தட்டெறிதல்** - அ.டே.கொன்சினிமேரி (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஏ.பகீனா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.), கே.தாரணி (புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி),

**ஈட்டியெறிதல்** - கே.தாரணி (புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி), எஸ்ரசிதா வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.), எஸ்.தர்சிகா (புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி).

**4x100 அஞ்சல்** - ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி., புனித திரேசாள் மகளிர் கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தி.

**4x100 மீற்றர் அஞ்சல்** - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி., அத்தியார் இந்துக் கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தி.

(வளரும்) (3-190)

# அபிவிருத்திக்கென கிராமங்கள் தெரிவு

வரணி,ஏப்.25

வரணிப் பிரதேசத்தில் நியாப் திட்டம் II இன் கீழ் இரண்டு கிராமங்கள் அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

குடமியன், கரம்பைக்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களுமே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மேற்படி கிராமத்தில் வீடமைப்புத் திட்டங்கள், வீதிப்புனரமைப்பு, பொது மண்டபங்கள் புனரமைப்பு, மலசல கூட வசதிகள் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-170)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 – 11 – 1959

உதிர்வு 25 – 04 – 2003



அமரர் **வீரசிங்கம் சகாயராஜா**

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாய் – இருந்த
எங்கள் குடும்ப குலவிளக்கே – எங்களுக்கு
துன்பத்தையும் துயரத்தையும் தந்து
விட்டு போய் விட்டீர்கள் – அப்பா

ஆண்டுகள் இரண்டு தான் ஆனாலும்
அழியாது எம்பாசம் ஆறாது எம் சோகம்
என்றும் உங்கள் ஆத்மா அமைதிபெற்று
இன்புற வேண்டுமென வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்.**

உடுவில் வடக்கு. (44565)(46-14-30)



## கேள்வி அறிவித்தல்

**அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.**

1. கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் 18.05.2005 புதன்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குக் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பநதகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோர் ஆவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை மாகாணக் கட்டடங்கள் திணைக்ள பிரதம பொறியியலாளரிடம் ச்மர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்று, கேள்விப் பத்திரங்களை 16.05.2005 வரை பிரதமபொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப் படாத (கேள்விப்பணம்) | ICTAD பதிவுதரம் | மீளளிக்கப் படும் 6 கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. மத்திய மருந்தகம் நிர்மாணித்தல்-புன்னாலைக்கட்டுவன். | 1,000/- | M-7 | 65,000/- |
| 2. பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை சிகிச்சை நிலைய மிகுதி வேலைகளைப் பூர்ததி செயதல். | 750/- | M-8 | 20,000/- |
| 3. தெல்லிப்பழை வைத்தியசாலை, வைத்திய அதிகாரி விடுதி திருத்த வேலை. | 750/- | M-8 | 25,000/- |
| 4. தெல்லிப்பழை வைத்தியசாலை, சத்திரசிகிச்சை நிலையமும், வார்ட் திருத்த வேலையும். | 1000/- | M-7 | 80,000/- |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன், ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்களப் பிரதம எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**கே.கணேஷ்,**
அரச அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்ட செயலகம்.
யாழ்ப்பாணம்.
25. 04. 2005 (சி.42454)(32-14-46-30)


# நல்லுணி வீதி புனரமைப்பு

வடலியடைப்பு நல்லுணி வீதியும், இவ் வீதியில் சேதமடைந்த நிலையில் இருந்து வந்த மதகும் அண்மையில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையினரால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (எ-135)

# சாவகச்சேரி மக்கள் வங்கி கணனி மயப்படுத்தப்படும்

தென்மராட்சி,ஏப்.25

சாவகச்சேரி மக்கள் வங்கியின் செயற்பாடுகள் அடுத்த வாரம் தொடக்கம் கணனி மயப் படுத்தப்படவுள்ளன.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மக்கள் வங்கிகளிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட கணனிச் செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் கணனி மயமாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (எ-117)

# முதியவர்களுக்கு உடுபுடைவைகள்

காரைநகர்,ஏப்.25

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் உள்ள முதியவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு காரை. மத்தி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம் இந்தப் புத்தாடைகளை முதியோர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (எ-73)

# உரும்பிராயில் புதிதாக அறநெறிப் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஏப்.25

உரும்பிராய் மூன்று கோயிலடி திருக்குமரன் சனசமூக நிலையத்தினரால் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி புதுவருட தினத்தன்று செ.சிவக்கொழுந்து இந்த அறநெறிப்பாடசாலையை ஆரம்பித்துவைத்தார்.

அறநெறி வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் -

மாணவர்கள் இந்த வகுப்புகளில் இணைந்து கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-203)

# கட்டுடையில் புதிதாக பஸ் தரிப்பு நிலையம்

வலி.தென்மேற்கு,ஏப்.25

சண்டிலிப்பாய் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் - கட்டுடையில் புதிய பஸ் தரிப்பு நிலையம் ஒன்றை அன்பளிப்பாக நிறுவிக் கொடுப்பதற்கு மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இங்கு முன்னர் இருந்த பஸ் தரிப்பு நிலையம் முற்றாக அழிந்துவிட்டதால் பஸ்ஸிற்கு காத்து நிற்கும் பயணிகள் வெய்யிலிலும் மழை காலங்களிலும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து இங்கு புதிய பஸ் தரிப்பு நிலையம் ஒன்றை விரைவில் நிறுவிக்கொடுப்பதற்குச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக மானிப்பாய் மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பொ.ம.க. முதலியார் தெரிவித்தார். (எ-135)

# கூட்டுறவுப் பணியாளர் பாராட்டிக் கௌரவிப்பு

தென்மராட்சி,ஏப்.25

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் 33 வருடங்கள் கடமையாற்றி இளைப்பாறிய மூன்று பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் பணியாளர் நலன்புரிக் கழகத் தலைவர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் கடந்த வியாழனன்று இந்த விழா நடைபெற்றது.

1972ஆம் ஆண்டு சங்கம் ஆரம்பித்த நாள் தொடக்கம் கிளையின் முகாமையாளராகக் கடமையாற்றிய வா.சின்னத்தம்பி, விற்பனையாளராகக் கடமையாற்றிய சி.சின்னத்தம்பி, க.மார்க்கண்டு ஆகியோருக்கே சேவைநலன் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

இளைப்பாறிய மூன்று பேருக்கும் சங்கத்தின் சார்பில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரங்களும் பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் வெகுமதிகளும் வழங்கப்பட்டன. (எ-117)

# வலி.தென்மேற்கில் 85 வீடுகள் நிறுவப்படும்

வலி.தென்மேற்கு,ஏப்.25

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 85 வீடுகள் நிறுவப்படவுள்ளன.

கடந்த போர்க்கால அனர்த்தங்களின் போது முற்றாக வீடுகள் சேதமடைந்தவர்கள், பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், போர்க்கால அனர்த்தங்களின் போது ஊனமுற்றவர்கள், வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் ஆகியோர் மத்தியிலிருந்து இதற்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

# இலங்கை வங்கி ஊழியர்கள் உதவி

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக கடந்த மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்ற களேபரத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான உரும்பிராயைச் சேர்ந்த அமரர் நாகன் கதிரன் குடும்பத்திற்கு இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட ஊழியர்கள் முப்பத்து ஒன்பது ஆயிரம் (39,000) ரூபா பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (எ-100)


## பதிவுகளுக்காக திறக்கப்பட்டுள்ளது




**கராஜ் மற்றும் சேவை உபகரணங்கள்**

உலகபுகழ் பெற்ற AIRLUB கராஜ் மற்றும் சேவைகளுக்கான உபகரணங்களை பெற்றுக்கொள்ள இப்பொழுதே பரிசீலனைக்கும் பதிவுகளுக்கும் வெளிநாட்டு முகவரை மே மாதம் 1ம் 2ம் திகதிகளில் கீழ் உள்ள காரியாலய விலாசத்துடன் தொடர்புகொண்டு ஓடர்களைசெய்யலாம்.

இலங்கைக்கான ஏக முகவர்கள்:

மே மாதம் 28. 29ம் திகதிகளில் கிளிநொச்சியில் வெளிநாட்டு முகவரை சந்திக்க பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**ANNAAZ MACHINERIES**
PRIVATE LIMITED

13. மல்வத்த குறுக்கு ஒழுங்கை. தெஹிவளை.
தொலைபேசி: 4-203102, 0777-723647 ஃபக்ஸ்: 4203101
மின்னஞ்சல்: annaazh@wow.lk

VIEWS (அ-42464)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 05 - 1925

மறைவு 25 - 04 - 2004



அமரர் **S.A அல்பிறெட் (செல்வரெத்தினம்)**

*(இளைப்பாறிய பிரதம லிகிதர்)*

இருவிழிகளில் எமை வைத்துக்காத்தீரே!
இன்று எம் விழிகள் ஈரவிழிகள்
ஆகிவிட்டதை அறிவீர்களோ - பப்பா?

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
**மனைவி, மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

9/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(44577)(46-14-30-26)



நெஞ்சை விட்டு அகலா

## முதலாம் ஆண்டு நினைவுகள்

அன்னை மடியில் 03 – 07 – 1959

ஆண்டவன் அரவணைப்பில் 05 – 05 – 2004



அமரர்

**க.விநாயகமூர்த்தி** (சுப்பையா)

*திதி : 25-04-2005*

இளஞாயிறு போல் எழுந்து நின்றீர்
இதய தெய்வமாய் வாழ்ந்தீர்
வளமான தா[illegible]யின் மலர்வு போல்
வழி காட்டி வாழ்வுக்கு ஒளியாகினீர்
ஊரில் உத்தமராய் வாழ்ந்து
உய்யும் நெறி[illegible] நின்றீர்
உளம் நோக [illegible] நேர்ந்து
உற்றதே [illegible]ஆகினும்
உலகம் உள்ளவரை உள்ளத்தில் நீர்;
உம் தடத்தில் என்றும் நாம்.

என்றும் நீங்கா நினைவுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**

கச்சாய்.வீதி.
கொடிகாமம். (C/42457)(46-14-30-26)

# நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி: ஐ.ஐ.எஸ். காலடி வைக்கின்றது

## சிலிங்கோ நிறுவன அதிகாரி தகவல்

தகவல் தொழில்நுட்பத் துறையில் பல்வேறு கற்கைநெறிகளை அறிமுகம் செய்த ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனம், தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறியை இப்போது யாழ். மக்களுக்கு அறிமுகம் செய்கின்றது.

- இப்படிக் கூறினார்.

ஐ.சி.பி.ரி. நிறுவனத்தின் தலைவர் ஜெகத் அல்விஸ்.

சிலிங்கோ நிறுவனத்தின் உயர்கல்விச் செயற்பாட்டில் உள்ள ஐ.சி.பி.ரி.கணனி நிறுவனம் ஐ.ஐ.எஸ்.நிறுவனத்தைத் தமது முகவராக நியமித்துள்ளது. அது தொடர்பான நிகழ்வு கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

ஐ.ஐ.எஸ்.நிறுவனம் இதுவரை தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய கற்கைநெறிகளையே நடத்தி வந்தது. தற்போது புதிய துறையில் அதாவது, தொழில் நிர்வாகத்தின் முதுமாணிக் கற்கைநெறிகளை ஆரம்பிக்கவிருககின்றது. கணனித்துறையில் பட்டம்பெற உதவும் இக்கற்கைநெறி இங்கு ஆரம்பிக்கப்படுகின்றது.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்ட திட்டமுன்மொழிவுகளின் படியே இங்கு கற்கைநெறி ஆரம்பிக்கப்படுகின்றது.

கற்கைநெறிகள் இங்கு கற்பிக்கப்படும்போது அக்கற்கைநெறி சர்வதேச தரத்தில் நடக்கின்றனவா என்பதை எமது நிறுவன விரிவுரையாளர்கள் அடிக்கடி வந்து பார்வையிடுவர்.

இங்கு சிறந்த விரிவுரையாளர்கள் இருந்தால், அவர்களைத் தெற்குக்கு அழைத்து அங்குள்ள கணனி நிலையத்தில் இடம்கொடுப்போம். இதன் மூலம் வடக்கு - தெற்கு இடையே அறிவுப் பரிமாற்றம் செய்யமுடியும். இருதரப்பின் அறிவுகளையும் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக் கிட்டும்.

கல்வி நிலையத்துக்குக் கட்டடங்கள், உபகரணங்களைவிடக் கல்விபயிலும் மாணவர்களின் உளநிலை அறிந்து கல்வி புகட்ட வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் கல்வி பயிலும் மாணவர்களின் உளநிலையை முதலில் அறிந்து அதற்கேற்ற வகையில் கல்வி போதிக்கிறார்கள். அந்தவகையில், இங்கும் மாணவர்களின் உளநிலையைப் புரிந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் கல்வி நிலையை வளர்க்கமுடியும்.

இங்கு பயிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றால் வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெறமுடியும் - என்றார் அவர்.

(3-7)



ஐ.சி.பி.ரி. கணனி நிறுவனத்தின் முகவராக ஐ.ஐ.எஸ். நிறுவனத்தை இணைந்து நடத்திய நிகழ்வில் ஐ.சி.பி.ரி. நிறுவனத் தலைவர் ஜெகத் அல்விஸ் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் இயக்குநர் விக்னேஸ் மற்றும் அதிகாரிகள் காணப்படுகின்றனர்.



அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் புதுவருடத் தினத்தில் நடைபெற்ற விழா வில் ஜெயசிறி சேமிப்புத் திட்டத்தில் தங்க நாணயப் பரிசுபெற்ற அச்சுவேலி மத் திய கல்லூரி ஆசிரியை திருமதி யசோதா கிருஷ்ணராசாவுக்கு மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசா, தங்கநாணயத்தைப் பரிசாக வழங்குவதைப் படத்தில் காணலாம். அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கமும் படத்தில் காணப்படுகின்றார். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# ஆற்றுப்படுத்தல் பணிகளில் வாழும் கலைப் பயிற்சி நிலையம்

"எம் இளைய சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது." இதுதான் இன்றைய மூத்த தலைமுறையினரின் கவலை. தக்க வழிகாட்டல்கள், வழிநடத்தல்களின்றி, சிதிலமடைந்து செல்லும் எம்சமூகத்திற்கு இன்று நல்ல நட்புணர்வுடன் பழகக்கூடிய நற்சிந்தனைகளை உருவாக்கக்கூடிய நல்லவர்களின் கூட்டுறவு தேவை. எமது உடன்பிறப்புகள் கடந்த காலப் போர் அழிவுகளாலும் அண்மையில் நடந்து முடிந்த சுனாமி அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டு மன




முடைந்து, வாழ்க்கையில் விரக்தியடைந்து போயுள்ளனர். இவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுத்தப்படுவது அவசியம். ஆற்றுப்படுத்தும் பணிகள் மூலம் இவர்களை அரவணைக்க வேண்டியது காலத்தின் தேவை.

இதனை நன்குணர்ந்து வாழும் கலைப் பயிற்சி அறநிலையம், இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வாழும் கலைப் பயிற்சியை இளைஞர் யுவதிகளுக்காக வழங்கிவருகிறது.

இந்த அமைப்பு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் நிறுவப்பட்டது. தற்போது 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் மூச்சுப் பயிற்சிகளையும் தியானப் பயிற்சிகளையும் வழங்கிவருகிறது.

அரச சார்பற்ற இந்த அமைப்பின் நோக்கம், உலகம் முழுவதும் ஆன்மீக ஒற்றுமையையும் மனித நேயத்தையும் மனித மேம்பாட்டையும் வளர்ப்பதாகும்.

இத்திட்டத்தின் ஒருகட்டமாகவே யாழ்ப்பாணத்திலும் கடந்த இரு மாதங்களாக உடல் உள ஆரோக்கியங்களை பெறத்தக்க வகையில் பயிற்சி முகாம்கள் இலவசமாக நடத்தப்படுகின்றன.

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இப்பயிற்சியைப் பெறுவதன் மூலம் பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கின்றன.

★ மன இறுக்கத்திலிருந்தும் உளைச்சலிருந்தும் பூரணமான விடுதலை.
★ சுயநம்பிக்கை, மேம்பாடு பெற.
★ உடல் உபாதைகள் நீங்க.
★ மனச் சஞ்சலம் நீங்கி தெளிந்த சிந்தனை செயல் பெற.
★ மன ஒருமைப்பாடு உண்டாக்கி நினைவாற்றல் பெருகும்.
★ பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துக் கொள்ளல்.
★ ஆர்வமும் உற்சாகமும் பெற.
★ சமூகத்திற்கும் உற்றவர்களுக்கும் உதவும் மனப்பான்மை வளர்க்கும்.
★ சமூகத் தொண்டுகளில் ஈடுபடல்.
★ மனக்கட்டுப்பாட்டுடன் வாழுதல்.

இத்தகைய பயிற்சிகளை நாமும் பெற்று நலமுடன் வளமும் பெற்று வாழ்வோம்.

(3)

# வியாபார முயற்சிகளை அபிவிருத்திசெய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் திட்டம்

வியாபார அபிவிருத்தி நிலைய வலயமைப்பானது சிறிய நடுத்தர வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன், அதற்கான சேவைகளை வழங்கும் அபிவிருத்தி சேவை வழங்குநர்களின் வாய்ப்பைக் கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டதாகும். இவ்வமைப்பானது ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் இலங்கை அரசினதும் இணைந்த செயற்றிட்டமாகும்.

இந்நிறுவனமானது நாடாளவிய ரீதியில் ஆறு வியாபார நிலையங்களைக் கொண்டுள்ளது. இவ்வலையமைப்பினை ஒன்றிணைந்து நடத்துபவர்களும் உரிமையாளர்களுமாக மூன்று தனியார் வியாபார அபிவிருத்தி நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. அவையாவன - இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம் (S.L.B.DC), சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்தி சேவைகள் நிறுவனம் (S.E.E.DS), கைத்தொழில் சேவைகள் பணியகம் (ISB).

எனவே, சிறிய நடுத்தர வியாபார முயற்சியாளர்கள் (S.M.E.S), வியாபார அபிவிருத்திச் சேவை ஊக்குவிப்பாளர்கள் (BUSINESS Developement Services Facilitators), வியாபார அபிவிருத்தி சேவை வழங்குநர்கள் (Business Developement Services Providers) ஆகியோர் தமது நிறுவனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எமது நிறுவனத்திடம் தொடர்பு கொள்ளும்போது எமது நிறுவனம் அவர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்கத் தயாராக உள்ளது. மேலும் வியாபார சேவைகள், உதவி வசதிகள் வழங்கும் நிறுவனம் (B.S.S.F) வழங்கும் பண உதவிகள் நிபுணத்துவ சேவைகள் என்பனவற்றைப் பெற்றுக்கொடுக்கவும் முன்வந்துள்ளது.

பின்வரும் செயற்றிட்டங்களுக்கு வியாபார சேவைகள், உதவி, வசதிகள் வழங்கும் நிறுவனம் (B.S.S.F) பண உதவிகளை அளிக்கும்.

**- வழங்குநர்களுக்கான சேவை**

★ தேவைகள் மற்றும் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சிகளை வழங்குதல்.

**நடுத்தர வியாபாரத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனைகளை வியாபார அபிவிருத்தி நிலையத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் வெளியிட்டுள்ளது. அந்த ஆலோசனைகள் இங்கு பிரசுரமாகின்றன.**

★ வியாபார சேவைகள் பயிற்றுவிப்போருக்கான பயிற்சிகள் வழங்கல்.

★ புதிய சேவை உற்பத்திகளுக்கான ஆய்வுகளும் அபிவிருத்திகளும்.

★ வியாபார அபிருத்தி சேவைகள் தொடர்பான தேவைகளை மதிப்பீடு செய்தல்.

★ வியாபார அபிவிருத்தி சேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தலுக்கான திட்டங்களைத் தயாரித்தல்.

★ வியாபார அபிவிருத்தி சேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தல் (ஊக்குவிப்பு) நடவடிக்கைகள்.

★ வியாபார அபிவிருத்தி தொடர்பான சேவைகளுக்குத் தகவல்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்.

★ சிறிய நடுத்தர வியாபார முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளைத் திட்டமிடலும் நெறியாள்கை செய்தலும்.

★ கைத்தொழில் சார்பான முதலீடுகளை ஊக்குவித்தல்.

**ஊக்குவிப்பாளருக்கான சேவை**

★ தொழில்நுட்ப பரிவர்த்தனை.

★ சிறிய, நடுத்தர கைத்தொழில் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளல்.

★ கைத்தொழில் சார்பான முதலீட்டு ஊக்குவிப்புகள்.

★ வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குநர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளை வடிவமைத்தல், ஒருங்கமைத்தல் அல்லது நடத்துதல்.

★ சிறிய, நடுத்தர கைத்தொழில் தொடர்பான திட்டமிடல், கொள்கை உருவாக்கல் ஆகிய செயற்பாடுகள்.

**நடுத்தரக் கைத்தொழில்**

★ ஊழியர்களுக்கான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றல், கல்விச் சுற்றுலாக்கள் ஆகிய செயற்பாடுகள்.

★ பயிற்சிகளுக்கான தேவைகளைக் கண்டறிதலும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான திட்டங்களைத் தயாரித்தலும்.

★ வியாபார அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களைத் தீட்டுதல்.

★ உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தீட்டுதல்.

★ இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்திலிருந்து தரச்சான்றிதழ் அறிக்கையைப் பெறுதலும் (SLS) உலகளாவிய நிறுவனங்களின் தரச்சான்றிதழைப் பெறுதல் (Eg: ISO)

★ புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான ஆராய்ச்சிகளும் அபிவிருத்திகளும் (உற்பத்தி இயந்திரவியல், தரக்கட்டுப்பாடு, உற்பத்தி தொடர்பான ஆய்வு, சந்தைப்படுத்தல் தொடர்பான ஆய்வு மற்றும் பொதியிடுதல், பெயரிடுதல்)

★ தொழில்நுட்பம் சம்பந்தமான அறிக்கைகளைத் தயாரித்தலும், சாத்தியக்கூற்று அறிக்கையைத் தயாரித்தல், திட்ட அறிக்கை முகாமைத்துவம், தொழில்நுட்ப வடிவமைப்புடன் கூடிய விளக்கப் படங்களைத் தயாரித்தல்.

★ வியாபார ஊக்குவிப்பு மற்றும் சந்தைப் படுத்தலுக்கான கையேடுகளைத் தயாரித்தல்.

★ தகவல் தொழில்நுட்பத்தை வியாபார அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.

(கணனி மென்பொருள்களை கையாள்வதற்கானப் பயிற்சி மற்றும் வெப்தளங்களைத் தயாரித்தல்)

★ தேவையான தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்தலும் வழங்குதலும்.

★ புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல்.

★ சட்டரீதியான அறிக்கைகளைத் தயாரித்தல். (வியாபார ஒப்பந்தங்கள், இணக்கப்பாட்டு ஒப்பந்தங்கள், உத்தரவாதப் பத்திரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தல்)

★ வியாபார அபிவிருத்தி நிலைய வலையமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வியாபார அபிவிருத்தி சேவை வழங்கல்கள்.

(3)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றும்
திரு. இ. கருணாநிதி அவர்களின் அன்புத் தந்தையார்

## இராசையா

அவர்கள் அகாலமரணமானதையிட்டு துயரமடைகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
**தாதியர் நலன்புரிச் சங்கத்தினர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

(44602)(26-14-45)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 12 - 1948



உதிர்வு 25 - 04 - 2002

## அமரர் கணபதி ஜீவகாருண்யம்

(ஜீவா) B.A.

(நிறைவேற்று அதிகாரி, உதவிப் பொதுமுகாமையாளர்
வ.பி.போ.சபை, காரைநகர் சாலை)

**திதி: 25-04-2005**

*வாழ நினைத்தவன் எங்கள் வாழ்வை அமைத்தவன்*
*கடவுளை நம்பியவன் எங்கள் நலனுக்காய் வேண்டியவன்*
*தன் திறமையால் உயர்ந்தவன் எங்கள் உயர்வுக்காய் உழைத்தவன்*
*இடையிலே நீர் மறைந்து இன்றுடன் மூன்று ஆண்டுகள்*
*மறக்கவும் முடியவில்லை; மன்னிக்கவும் முடியவில்லை உம் மரணத்தை....*

கண்ணீருடன்:
**பாசமிகு சகோதரங்கள், மைத்துனர்மார்,**
**மக்கள், மருமக்கள், சித்திமார், சித்தப்பாமார்.**

(44600)(26-14-45)

# கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

(3-204)

# வாரத்தில் இரு தினங்கள் வருமாறு அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,ஏப்.25

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் தங்கள் உலர் உணவு நிவாரணம் தொடர்பான விடயங்கள் பற்றி திங்கட்கிழமைகளிலும் புதன்கிழமைகளிலும் மட்டுமே பிரதேச செயலரைச் சந்தித்துக் கலந்துரையாட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய அறிவித்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(3-135)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459.

(44057)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 672 |
| திகதி | 22-4-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
**5374302-5386643**

வெற்றி இலக்கங்கள்
**10 16 40 43**

லக்கினம் சிங்கம்

ஜக்பொட் பரிசு
ரூபா.14,30,450/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 20,37,400/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,71,784 | 10/- | 27,17,840/- |
| 2.இலக்கங்கள் | 24,990 | 20/- | 4,99,800/- |
| 1.இல + லக்கினம் | 24,758 | 30/- | 7,42,740/- |
| 2.இல + லக்கினம் | 2,247 | 100/- | 2,24,700/- |
| 3.இலக்கங்கள் | 666 | 500/- | 3,33,000/- |
| 3.இல + லக்கினம் | 61 | 5,000/- | 3,05,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 1,430,450/- | - |
| மொத்தம் : | 3,24,515 | - | 62,75,330/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,75,330/-

தொடர் இல. 4437663 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**5384874-3-51**
**5386202-0-78**
**5376735-4-51**
**5380364-4-58**
**5378248-7-62**


# மண்ணினில் மறைந்திடினும் மனந்தனில் நிறைந்திடும்

# ஓராண்டு நினைவஞ்சலி

"விண்ணகத்தில் வீற்றிருக்கும் எங்களன்புத் தந்தையே
தூய நாமம் போற்றப்படுவதாக"

மண்ணில் 10-10-1915

விண்ணில் 25-04-2004



செந்தமிழ் வானிலுற்ற தினகரனே உன்னை ஈசன்
அந்தி வந்து ஆட்கொண்டான்டொன் றாகியதோ
பைந்தமிழே பாவலனே நாவலனே பண்ணுதமிழ்க் காவலனே
ஏவலனே என்செய்வோம் யாம்?

கட்டுக்கடங்குதில்லை கருத்து நிலை கொள்ளுதில்லை
திட்டப்படுத்த நெஞ்சு தேறுதில்லை.
அட்டதிக்கும் போற்றுகின்ற ஐயா உமைப்பிரிந்து
விட்ட துயர் தீர்க்க என்செய்வோம்?

பண்ணாலே உன் புகழைப் பாடவெண்ணில்
பற்றாது மதி எமக்கப் பணியைச் செய்ய
பொன்னாலே சிலையமைத்துப் போற்றவெண்ணில்
போதாது நிதி எமக்கும் புகழை ஏத்த
கண்ணான ஐயா நின் பிரிவாலுற்ற
கவலை மறந்திடும் நாள் எந்தநாளோ?

அன்பினுக் கன்பாய் எங்கள் ஆருயிக்குயிரதானீர்
என்பினுக் கென்பாய் எங்கள் இதயத்தில் இதயமானீர்
பொன்பொலி மேனி எங்கே புகழ்பெற்ற புயம்தானெங்கே
மண் பொலிந்திடவிதியோ மாதுயரில் வாடுகின்றோம்!

பொன்னிற் புதுமெருகே புடமிட்ட தங்கமே – எம்
கண்ணின் இருமணியே களங்கமில் ரெத்தினமே
விண்ணாடர் உமை அழைத்து ஓங்குபரத்திட்டாரோ
பண்ணோடவர் புகழ்பாடிப்பாடி மகிழ்ந்திருப்பீர்.

கலாபூஷணம் பாஷையூர்ப் புலவர்

## அமரர்

## ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை செகராஜசிங்கம்

இல. 19, 2ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

ஐயாவின் நித்திய இளைப்பாற்றிற்காகப் பரமதந்தையை வேண்டும்:
**அன்பு மனைவி, அன்பு மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.**

(44583)(54-

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## நோர்வே பிரதமர், ஐ.நா.செயலாளர் ஆகியோருக்கு அதிபர் சங்கம் கடிதம்

புதுக்குடியிருப்பு,ஏப்.25

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக அலகை வழங்குவதற்கு இலங்கை அரசுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவுக் கல்வி வலய அதிபர்கள் சங்கம் நோர்வே பிரதமர், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் மீது தொடரும் இராணுவ அடாவடித்தனங்கள், மீண்டும் பலப்படுத்தும் உயர்பாதுகாப்பு வலயங்கள், மக்களின் வாழ்விடங்கள், பயன்தரு விளைநிலங்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்புகள், தமிழ்மக்களின் மீதான தாக்குதல்கள் ஆகியன எமது மக்களின வாழும் உரிமையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்தாகி மூன்று ஆண்டுகள் கடந்த பின்னும் இயல்பு மீளாத அச்சத்தினுள் புதைத்தவையாகவே நாள்கள் கழிகின்றன. எமக்கான இயல்பு வாழ்க்கை வேண்டும்.

போருக்கான சிறிலங்கா அரசின் ஆட்சேர்ப்புக்கள், பயிற்சிகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். எமது சொந்த மண்ணில் அச்சமற்ற அமைதியான சுதந்திர வாழ்வுக்காக கீழ்வரும் வேண்டுகைகளை நிறைவேற்றி வழிசெய்ய வேண்டும்.

★ ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களில் இருக்கும் உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுதல். மக்களின் குடியிருப்புக்கள், கல்வி நிலையங்களிற்கு அருகிலுள்ள படைநிலைகளை அகற்றுதல்.

★ போருக்கான சிறிலங்கா அரசின் இராணுவ ஆள்சேர்ப்புக்கள், பயிற்சிகள், இராணுவத் தளபாடக் கொள்வனவுகளை உடன் நிறுத்துதல்.

★ மனிதாபிமான உட்கட்டமைப்பு உபகுழுவான 'சிரான்' அமைப்பின் காத்திரமான செயற்பாட்டிற்கு வழி செய்தல்.

★ சுனாமி அனர்த்த உதவிப் பணிகளிற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல்.

மேற்குறித்த நியாயபூர்வமான எம் கோரிக்கைகளை நிறைவேற்றி தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அரசை ஒப்படைத்து உரிமை கொண்ட மனிதர்களாக நாங்கள் வாழ வழி செய்க. எம் உணர்வுகளைக் கருத்தில் எடுக்கத் தவறின் நீண்டகாலமாக மனவெறுப்புடனும் விரக்தியுடனும் வலிமிகுந்த வாழ்வினைச் சுமக்கும் தமிழ்மக்களாகிய எங்களின் துயர் நீக்க போரின் திசையில் புலிகள் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

எம் அவல வாழ்வையும் துன்பத்தையும் கருத்திற்கொண்டு இன்றுவரையான புலிகளின் பொறுமை காத்தலுக்கு மதிப்பளித்து தாங்கள் உடனடியாக செயற்பட வேண்டுமென முல்லைத்தீவு வலய அதிபர்கள் சங்கத்தினர்களாகிய நாங்கள் பெரு நம்பிக்கையோடு வினயமாகக் கேட்கின்றோம் - என்றுள்ளது.

(8-353)


## இரணைமடு கனகாம்பிகை வருடாந்தத் திருவிழா

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் பெருங்கோவில் பெருந்திருவிழா கடந்த 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நிறைவடைந்துள்ளது.

22ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் இரணைமடு வாவியில் தீர்த்தோற்சவமும் நடைபெற்றன.

வன்னிப் பகுதியில் 3 சித்திரத் தேர்கள் பவனிவரும் ஒரே கோவில் கனகாம்பிகை அம்மன் ஆலயம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

(த-301)



பரந்தன் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காகப் பொதுச்சந்தைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கியைப் படத்தில் காணலாம்.
*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## முன்பள்ளி கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு

வட்டக்கச்சி,ஏப்.25

இராமநாதபுரம் மனோகரி முன்பள்ளிக்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்கு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஒன்றரை லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அண்மையில் இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(த-405)

## புதிய நூலகர் நியமனம்

வட்டக்கச்சி,ஏப்.25

கரைச்சிப் பிரதேச சபையின் கிளிநொச்சிப் பொதுநூலகத்திறகுப் புதிய நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இ.சசிகலா என்பவரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் முரசுமோட்டை பொதுநூலகத்தில் தற்காலிக நூலகராகக் கடமையாற்றியவர்.

கரைச்சிப் பிரதேச சபை பொதுநூலகத்தில் இதுவரை தற்காலிக நூலகர்களே கடமையாற்றிவந்தனர். தற்பேது இந்நூலகம் தரம் உயர்த்தப்பட்டதையடுத்து நிரந்தர நூலகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(த-405)

## இளைஞர் சேவைகள் அதிகாரி பதவிக்கான நேர்முகத் தேர்வு

ஒட்டுசுட்டான்,ஏப்.25

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரி தரம் 1 இற்கு விணணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், கிராம சேவையாளரின் சான்றிதழ் - பட்டதாரி பயிற்சி பெறுவது பற்றிய அத்தாட்சிப் பத்திரம் - தேசிய அடையாள அட்டை, இளைஞர் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் கலந்துகொண்டமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் நேர்முகத் தேர்வுக்கான கடிதம் என்பவற்றுடன் சமுகமளிக்கவேண்டும் என்று பண்டாரவன்னியன் இளைஞர் கழகத்தினர் அறிவித்துள்ளனர்

(த-341)

## வாசகர் வட்டக் கூட்டம்

வட்டக்கச்சி,ஏப்.25

பூநகரி பிரதேச சபையின் பொதுநூலக வாசகர் வட்டக் கூட்டம் நூலக மண்டபத்தில் பூநகரிப் பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் க.யோகநாதன் தலைமையில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நூலகர் சிறப்புரையாற்றினார்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் புதிய வாசகர் வட்ட உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(த-405)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வட்டக்கச்சி,ஏப்.25

கரைச்சிப் பிரதேசசபையினர் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்து வருகின்றனர்.

இம்மாத முற்பகுதியில் உருத்திரபுரம், பொறிக்கடவைப் பகுதிகளிலும், பின்னர் ஜெயந்தி நகர் பகுதியிலும் இக்கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன.

இப்பணியில் ஈடுபடுத்துவதற்கு ஆளணி பற்றாக்குறையாகக் காணப்படுவதாலும், நாய்களைக் கொல்வதற்கான நவீனமுறை மருந்துகள் இல்லாமையாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பு போதாமல் உள்ளமையாலும் இதைத் திறம்பட நடத்துவதில் இடையூறுகள் காணப்படுவதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-405)

## சர்வோதயத்தின் அனுசரணையுடன் பொதுமக்களுக்கு நுளம்புவலை

வட்டக்கச்சி,ஏப்.25

கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினர் சர்வோதயத்தின் அனுசரணையுடன் பொதுமக்களுக்கு நுளம்புவலைகளை அன்பளிப்பாக வழங்கிவருகின்றனர்.

கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இந்த நுளம்பு வலைகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நுளம்பு வலை என்ற அடிப்படையில் அனைத்துக் குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக நுளம்புப் பெருக்கம் அதிகமாகவுள்ளதால் இந்த நுளம்பு வலைகள் பயனுடையதாக அமைந்துள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி புதுக்காடு, ஆலடி, கல்மடுநகர், இராமநாதபுரம், மாயவனூர் பகுதிகளிலும் 21ஆம் திகதி இராமநாதபுரம் மாவடி, மாயவனூர் பகுதிகளிலும் 22ஆம் திகதி சிவிக்சென்ரர், இராமநாதபுரம், மாவடி, மாயவனூர் பகுதிகளிலும் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

23ஆம் திகதி வட்டக்கச்சி, பத்து வீட்டுத் திட்டம் பகுதியில் வழங்கப்பட்டது. இன்று பன்னங்கண்டில் பகுதி மக்களுக்கு நுளம்பு வலை வழங்கப்படும்.

தொடர்ந்து ஏனைய பகுதிகளிலும் வழங்கப்படும் என்று கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

சர்வோதய அதிகாரிகளும் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அலுவலர்களும் அந்தந்தக் கிராமங்களுக்குச் சென்று வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு நுளம்பு வலை பெறத் தவறியவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு புனர்வாழ்வு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.(த-405)




## அன்னை பூபதி நினைவாக அக்கராயனில் கலையரங்கு

கிளிநொச்சி,ஏப்.25

அக்கராயன் டானியல் விளையாட்டரங்கில் தியாகதீபம் அன்னை பூபதி நினைவாக கலையரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தினமான கடந்த 19ஆம் திகதி இதற்கான அடிக்கல் நடப்பட்டது.

டானியல் விளையாட்டரங்கில் 19ஆம் திகதி மாலை 7 மணிக்கு சபாரத்தினம் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமாகியது.

ஈகச் சுடரினை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். மலர் மாலையினை மாவட்ட அரசியல்துறைப் பெறுப்பாளர் கலைவாணனும் அக்கராயன் பிரதேச வைத்திய அதிகாரியும் அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரையை பசுபதிப்பிள்ளை, மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அன்னை பூபதி நினைவுக் கலையரங்குக்கான அடிக்கல்லினை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் நட்டுவைத்தார்.

(த-301)

## படையினரின் மண் அணைகளால் பயிர்ச்செய்கைக்குப் பாதிப்பு

### ஒட்டுசுட்டான் விவசாயிகள் கவலை

ஒட்டுசுட்டான்,ஏப்.25

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நெடுங்கேணி ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பாரிய மண் அணைகள் மக்களது காணிகளில் போடப்பட்டதால் மக்கள் தமது காணிகளில் பயிர்ச்செய்கை பண்ணுவதிலும் குடியமர்வதிலும் பாரிய இடர்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

நெடுங்கேணி முதல் ஒட்டுசுட்டான் வரை ஆங்காங்கே பாரிய அணைக்கட்டுக்கள் காணப்படுகின்றன. இதனால், காணிகள் இரண்டு மூன்றாகப் பிரிந்துள்ளன. சில இடங்களில் குளங்கள் போன்று நீர்தேங்கி நிற்கின்றது. இதனால், அக்காணிகளில் மீளக்குடியமரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட அணைக்கட்டுகள் கனரக வாகனங்களின் உதவியுடன் போடப்பட்டதால், அதனை அகற்றுவதில் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(த-341)

## முல்லைத்தீவு ம.வியை இடம் மாற்ற முடிவு!

ஒட்டுசுட்டான்,ஏப்.25

ஆழிப்பேரலையினால் அழிவுற்ற முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தை முன்பு இயங்கிய இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 21ஆம் திகதி வித்தியாலய முதல்வர் அல்பிரட் தலைமையில் பாடசாலை அமைந்த பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறைக்கூடத்தில் நடைபெற்றது இந்தக் கூட்டததிலேயே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

(த-341)

## வீதிக்கு குறுக்காக நீர் பாய்வதால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு!

வட்டக்கச்சி,ஏப்.25

வட்டக்கச்சி சந்தையடிக்கு அருகில் உள்ள நாவலடிப் பகுதியில் வீதியின் குறுக்காக நீர் பாய்வதால் மக்கள் போக்குவரத்தில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

வட்டக்கச்சிப் பகுதியையும் இராமநாதபுரம் பகுதியையும் இணைக்கும் பிரதான வீதியின் இப்பகுதியில் நீர் பாய்வதனால் மக்கள் தமது நாளாந்தக் கருமங்களுக்காகப் போக்குவரத்துச் செய்ய முடியாமலுள்ளது.

தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாகவும் சிறுபோக நெற்செய்கைக்காக இரணைமடுக் குளத்திலிருந்து வட்டக்கச்சி வாய்க்காலுக்கான நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை இப்பகுதியில் தொடர்நத வண்ணமுள்ளது. எனினும், இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்ந்து கவனம் எடுக்காது இருப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(த-405)

# வேலையாள்கள் உள்ளனர்

பின்வரும் வேலைகளுக்கு ஆண், பெண் வேலையாள்கள் உள்ளனர். தேவைப்படும் நிறுவனங்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(1) கணக்காளர்
(2) களஞ்சியக் காப்பாளர்
(3) விற்பனைப் பிரதிநிதி
(4) எழுதுவினைஞர்
(5) கணனித்துறை சார்ந்த வேலைகள்
(6) கனரக வாகனச் சாரதி
(7) தாதி
(8) முகாமையாளர்
(9) English Typist
(10) Receptionist
(11) Beautision
(12) Painter மற்றும் பல

தொடர்புகளுக்கு:
FIRST MANPOWER CENTRE & JOB AGENT
T.P.: 021 - 2223298.
077 - 3068984.
POWER GYM BUILDING
230/1, நாவலர் வீதி,
ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.
(சி-42497)(26-14)


# 49 ஆவது ஆண்டு விழா

கைதடி,ஏப்.25

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று இரவு 8மணிக்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சு.பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் அ.ஜெயராஜ் மற்றும் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் க.ஈஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவிப்பு விழா, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (த-75)

# கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.25

காக்கைதீவு, சாவற்கட்டு, நவாலி ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்கள் வண்டில் மூலம் பிடித்து நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் தடுப்பூசி ஏற்றப்படாத கட்டாக்காலி நாய்கள், குடும்ப அட்டைகள் பெறாது கட்டாக்காலியாகத் திரியும் வளர்ப்பு நாய்கள் என்பன நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

வளர்ப்பு நாய் வைத்திருப்போர் உரிய முறைப்படி நாய்களைக் கட்டி வளர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அடுத்த மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் மாதகல் உப அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன. (த-185)

# சிறப்புற நடந்த பெண்கள் தின விழா

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழுவின் அனைத்துலகப் பெண்கள் தினவிழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் சிறப்புடன் நடைபெற்றது.

மகளிர் குழுவின் தலைவி திருமதி கௌசல்யா காந்தீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் செல்வி யோ.கயல்விழி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன், மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் ஆகியோரும் -

சிறப்பு விருந்தி னர்களாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பெ.கனகசபாபதி மாவட்ட சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம், தமிழீழ கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிறப்புரையை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் நிகழ்த்தினார். கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-111)

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மருந்தாளர் இல்லை

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலமாக மருத்துவமாது, மருந்துக் கலவையாளர் ஆகியோரின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலுள்ளதால் நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கும் வேலையை தாதிமார்களும் சிலவேளைகளில் வைத்திய அதிகாரியுமே செய்துவருகின்றனர். இந்த நிலைமைகளினால் வைத்தியசாலைக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார் வேறு வைத்தியசாலைக்குச் செல்வதையும் காணமுடியுகிறது. (த-100)


# 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 1970 - 07 - 07



மறைவு 2004 - 10 - 25

ஜேசுராசன் - சந்திரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்

**அமரர் ஜேசுராசன் அன்ரோ கொலின்ஸ்**

அன்புக்கும் ஆதரவுக்கும் ஒளிவிளக்காயிருந்து
அரை நொடிப்பொழுதில் அணைந்துவிட்ட தீபமே!
இன்பவாழ்வு வாழ்வாயென நம்பி நாமிருக்கையிலே
இடைநடுவில் எமைவிட்டு ஏன்தான் பிரிந்தீரோ?
ஆறு மாத காலமானாலும் ஆறுதலின்றி நாம் தவிக்கின்றோம்
பிரிவாற்றாமல் தினம் நினைந்து கண்ணீர் சொரிகிறோம்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

துயரத்தில் வாழும்:
அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

சந்திராஸ் ரோர்ஸ்,
8ஆம் வட்டாரம்,
மந்துவில், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (44622)(26-14-45)



# முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்

**வேலுப்பிள்ளை செல்லத்துரை**

(கொடிகாமம் - வைத்தியர்)

ஓராண்டு சென்றாலும் ஓரவிழி காயவில்லை
தீராத வேதனையால் தினமும்
துடிக்கின்றோம்.
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

K.T.M. எண்ணெய் ஆலை,
கல்வியங்காடு. (44624)(26-14)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# ஆன்மீக உரை



இடம்: யாழ்.இந்து மகளிர் கல்லூரி
காலம்: இன்று (25-04-2005) திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணி

வழங்குபவர்: பேராசிரியர் **அனில்குமார்**

(சத்தியசாயி உயர்படிப்பு பல்கலைக்கழகம், புட்டபர்த்தி, பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் மொழிபெயர்ப்பாளர்)

கலை நிகழ்வும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மத்திய இணைப்பாளரும்
வடபிராந்திய இணைப்புக் குழுவினரும்
பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிறுவனம்,
இலங்கை.

(44623)(26-14)



23.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300216843 இலிருந்து 300229594 வரை

சீட்டிழுப்பு இல. 1600

30 33 55 68 — சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.30,18,350/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 30,18,350/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 20 | 5,000/- | 100,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 335 | 1,000/- | 3,35,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,095 | 500/- | 5,47,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 16,274 | 40/- | 6,50,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 15,395 | 20/- | 3,07,900/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,30,656 | 10/- | 23,06,560/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. [illegible]

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 57,47,920/-

300223747-6-59
300219548-5-32
300220483-0-18
300223065-9-50
300225837-1-23


# மரண அறிவித்தல்கள்

## ஞானசேகரம் ஜயந்தன்



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசேகரம் ஜயந்தன் 09-04-2005 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் பேதுறுப்பிள்ளை ஞானசேகரம் (லண்டன்), சர்வேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மகனும் ஜயந்தினி, நிஷாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-04-2005) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானசேகரம் சர்வேஸ்வரி.

மணற்பகுதி,
புத்தூர். (44625)(26-14)

## இராமு சிவக்கொழுந்து (சின்னராசா)



உடுப்பிட்டி, நாவலடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடம், ஆத்திசூடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராமு சிவக்கெழுந்து (சின்னராசா, முன்னாள் கட்ட ஒப்பந்தகாரர்) அவர்கள் 19-04-2005 அன்று செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமு - அம்முனியின் அன்புப் புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நஞ்சன், மோகன் (ஜேர்மனி), ராசன் (லண்டன்), நசிதா, நஜினா, நாஜினி (நோர்வே), காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் கிருசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசமலர், ராஜி (ஜேர்மனி), விஜயா (லண்டன்), கோகிலராசா, உதயகுமார், ரூபராஜன் (நோர்வே), சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25-04-2005 திங்கட்கிழமை மாலை 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமேஸ்வரி (மனைவி).

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (44627)(26)


# தந்தை செல்வநாயகம் 28ஆவது நினைவுநாள்



## அஞ்சலி நிகழ்ச்சி

காலை

காலம்: நாளை (26-04-2005) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி
இடம்: தந்தை செல்வா நினைவிடம், தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

சர்வமதப் பிரார்த்தனை



## மாலை நிகழ்ச்சி நினைவுப் பேருரை

நேரம்: நாளை (26-04-2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி
இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்
நாதஸ்வர இசை
தலைமை: மேதகு ஆயர் அருட்கலாநிதி சு.செபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு)
நினைவுப்பேருரை: பேராசிரியர் சி.பத்மநாதன்
(வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
பொருள்: "இலங்கைத் தமிழரும் சுயாட்சி உரிமையும்"

நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-42496)(26-14)

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு.



மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற முதலாம் தர மாணவர்களின் கால்கோள் விழாவில், மாணவர்களுடன் வித்தியாசாலை அதிபர் செ.பேரின்பநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பா.பொன்னுச்சாமி மற்றும் ஆசிரியர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. *(படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்).*




சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற உழவர் தினவிழாவில் சிறார்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியைப் படத்தில் காணலாம். *(படம்:தென்மராட்சி செய்தியாளர்).*



யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது அணிநடை மரியாதையை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட 'கொனிக்கா கலர்லாப்' உரிமையாயர் வீ.ஸ்ரீதரன், திருமதி மை.ஸ்ரீதரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களான சிவஸ்ரீ வரத.இராஜேஸ்வரக் குருக்கள், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, திருமதி எஸ்.கிருஷணமூர்த்தி பாடசாலை அதிபர் சி.மாணிக்கராஜா ஆகியோர் ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். *(படம்: குருநகர் செய்தியாளர்).*



தீவக வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்ற வி.மகேந்திரனை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. நகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை, கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம் ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: நெடுந்தீவுச் செய்தியாளர்)*

# கற்றல் வள நிலையங்களின் முக்கியத்துவம் அதிபர்கள் பலரால் உணரப்படவில்லை

**'உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப நூலகங்களிலும் மாற்றம் தேவை' என்ற தலைப்பில் கடந்த 04.04.2005 அன்று கல்விக்களம் பகுதியில் வெளியான கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.**

உயர் விழுமியங்களை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கக்கூடிய ஒரே நிறுவனமாக விளங்கும் கற்றல் வள நிலையங்களின் முக்கியத்துவமும், அவற்றின் பெறுமதியும் பல பாடசாலைகளின் அதிபர்களினால் உணரபபடாது இருப்பதனாலேயே இன்று மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்ததுடன் அவர்களின் ஒழுக்கமும் கேள்விக்குரியதாகிக் கொண்டு வருகின்றது என்பதை இன்றைய கல்வியியல் ஆய்வாளர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## கற்றல் வள நிலைய அபிவிருத்தியில் அதிபரின் பங்கு

வினைத்திறன் மிக்க பாடசாலை ஒன்றை அங்கு செயற்படும் நூலகச் செயற்பாட்டைக் கொண்டே மதிப்பீடு செய்ய முடியும். சிறந்த நூலக அபிவிருத்திச் செயற்பாட்டை முன்னெடுக்க விரும்பும் அதிபர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1. நூலகத்திற்கான தனியான கட்டடம் என ஒன்று இல்லாவிட்டாலும் மூடப்பட்ட வகுப்பறையிலோ அல்லது தற்காலிகமான ஓர் அறையிலோ நூலகச் செயற்பாட்டை முன்னெடுக்கலாம்.

2. ஒரே நேரத்தில் பல மாணவர்களை நூலகச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு 'புத்தகப்பெட்டி முறையை' (Book Box System) அறிமுகப்படுத்தி, ஒவ்வொரு வகுப்புகளிலும் நூலக மாணவர் தலைவர்களை (Library Monitor) வாரம் ஒருவர் என்ற வகையில் நியமித்து அவரினூடாக வகுப்பறை மட்ட வாசிப்புத்திறனை அதிகரிக்கச்செய்தல் வேண்டும். இதற்கு ஆசிரிய நூலகர்களின் சேவைகளை அதிபர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

3. அதிபர்கள் தனது தலைமையின் கீழ் செயற்படும் வகையில் ஆசிரிய நூலகரைச் செயலாளராகக் கொண்ட நூலக முகாமைத்துவக் குழுவை அமைத்து அவற்றினூடாக நூலக அபிவிருத்தியை முன்னெடுக்கவேண்டும்.

4. நூலகத்தை விரிவாக்கும் (Extension of Library) நடவடிக்கைகளை அதிபர்கள் விரைந்து, தற்துணிவுடன் மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பின்வரும் மூலங்களின் சேவைகளைப் பெற்றுகொள்ள வேண்டும்.

**ந.அனந்தராஜ் எம்.ஏ.**

★ வசதிகள், சேவைகள் கட்டண நிதியில் இருந்து நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்களைக் கொள்வனவு செய்தல்.

★ தர உள்ளீட்டு நிதியில் (Quality Input) இருந்து நூல்கள், சஞ்சிகைகள் செய்தித்தாள்கள், நூல்கள் வைப்பதற்கான கண்ணாடி அலுமாரிகள், புத்தக றாக்கைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல். பல அதிபர்கள் தர உள்ளீட்டு நிதியை நூலக அபிவிருத்திகாக பயன்படுத்துவது குறைவாக இருக்கின்றது.

★ பிறந்தநாள் அன்பளிப்புத்திட்டம், திருமணநாள் அன்பளிப்புத்திட்டம், நீத்தார் நினைவு தினங்கள் என்பவற்றின் பெயரால் மாணவர்கள் ஆசிரியர்களிடம் இருந்து நூல்களை அன்பளிப்பாகப் பெறுதல்.

★ உள்ளூர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வணிக நிறுவனங்கள், பழைய மாணவர் சங்கங்கள், கழகங்கள் என்பவற்றின் மூலம் நூல்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

★ உசாத்துணை நூல் பகுதியில் உள்ள நூல்களை மாணவர்களும், ஆசிரியர்களும் இலகுவில் கையாளக்கூடிய வகையில் திறந்த நிலையில் காட்சிப்படுத்துவதை உறுதிப்படுத்துதல்.

★ நூலக வாரத்தை பிரகடனப்படுத்தி மாணவர்கள், ஆசிரியர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் நூலகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

★ ஆசிரிய நூலகரின் முக்கியத்துவத்தை உணர்வதுடன் அவருக்குரிய சகல வசதிகளையும் பணி ஒதுக்கீட்டையும் ஏற்படுத்திக் கொடுத்தலினூடாக சிறப்பான நூலக அபிவிருத்தியையும், கற்றல் நடவடிக்கைகளையும் மேம்படுத்துதல் வேண்டும்.

**கல்விக்களம்**

★ நூலகக் கட்டடத்தையும், நூலகத் தளபாடங்களையும், உபகரணங்களையும் நூலக அபிவிருத்திக்காகவே பயன்படுத்த வேண்டும். சில அதிபர்கள் நூலகக் கட்டடங்களை விருந்தினர்களுக்கு உணவு, தேநீர் பரிமாறும் மண்டபமாகவும், கூட்ட அறையாகவும், அதிபர் அலுவலக அறையாகவும், ஆசிரியர் ஓய்வு அறையாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

★ பாடசாலைகளில் வாசிப்பு வட்டம், இலக்கிய மன்றங்கள், நூல் தெரிவுப் புதிர்ப்போட்டிகள், எழுத்தாக்கத்திறன் போட்டிகள், செய்திப் பலகை, கையெழுத்துச் சஞ்சிகைகள், சிறந்த வாசகர் தெரிவு, நூலகத்திற்கான நேர ஒதுக்கீடு என்பவற்றைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

★ எல்லாவற்றிற்கும் மேலாக அதிபர் சிறந்த வாசிப்பாளராகவும் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராகவும் இருக்கவேண்டும்.

எனவே, மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் அவர்கள் ஒவ்வொருவரினதும் நல்லொழுக்க வாழ்வும், உயர்மட்ட விழுமியங்களும் சிறப்படையவேண்டுமென்றும் அதிபர்கள் உளரீதியாக ஏற்றுக்கொள்வார்களாயின், தமது பாடசாலைகளில் நூலக அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து பாடசாலைகளின் கற்றல் வளநிலையங்களை மாணவர் மயப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நூலகங்களினூடாகப் புதிய உலகைக் கட்டி எழுப்ப முடியும்!

# தமிழ்த்தினப் போட்டி குறித்த விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

வடக்கு - கிழக்கு மாகாண, மாவட்டத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி -

எழுத்தாக்கப் போட்டிகள் அடுத்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

மாவட்ட ரீதியாகப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையங்கள் பற்றிய விவரம் வருமாறு -

யாழ்ப்பாணம் - வேம்படி மகளிர் கல்லூரி, கிளிநொச்சி ம.வி, முல்லைத்தீவு - மாங்குளம் ம.வி, மன்னார் - அல் அஸ்ஸர் ம.வி, வவுனியா - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, திருகோணமலை - ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு - வின்சன் மகளிர் கல்லூரி, கல்முனை - உவெஸ்லி கல்லூரி.

வலய மட்டத்தில் எழுத்தாக்கப் போட்டிகளை நடத்தி ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதலாம் இடம்பெற்ற மாணவர்களின் விவரங்களை ந.ஆனந்தராஜ், உதவிக்கல்விப் பணிப்பாளர், தமிழ்மொழிப் பிரிவு, மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை. என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு -

அதன் பிரதியை மாவட்ட தமிழ் மொழித் தின செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை - மாவட்ட நிலை தமிழ் மொழித் தினப் போட்டிகள் அடுத்த மாதம் 29 ஆம் திகதியும் -

மாகாண நிலைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 30 ஆம் திகதியும் -

மாகாண தமிழ் மொழித்தின விழா எதிர்வரும் ஜுலை மாதம் 31 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (த-202-203)

# பேராசிரியர் அனில்குமாரின் சொற்பொழிவு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.25

ஸ்ரீ சத்திய சாயி உயர் கல்வி படிப்பு பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பேராசிரியராகப் பணிபுரியும் பேராசிரியர் அனில்குமார் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள அனில்குமார் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தெலுங்கு மொழியிலான ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்பவர்.

இவரின் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி சிவகுருநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடபிராந்திய இணைப்புக் குழுத்தலைவர் இ.வசந்தசேனன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய உபதலைவர் டாக்டர் சி.சிவகோணேசன் அறிமுக உரையினை நிகழ்த்துவார்.

பேராசிரியர் அனில்குமாரின் உ[illegible] ஸ்ரீ சத்திய சாயி சேவா [illegible] டாக்டர் இ.கணேச[illegible] வழங்குவார்

தொடர்[illegible]

## குருநகரில் வடிகால் சேதம்

குருநகர்,ஏப்.25

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் மேற்கு வீதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகால் சேதமடைந்துள்ளது. இதனால் நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக சேறுமண்டித் துர்நாற்றம் வீசுகிறது. இதனைத் திருத்தியமைக்குமாறு யாழ்.மாநகர சபையிடம் கோரப்பட்டபோதிலும் இதுவரை திருத்தியமைக்கப்படவில்லை என இவ்வீதிக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (3-51)


## யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
## க.பொ.த. உயர்தரம் - 2007

கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகளில் கற்கத் தகைமையுடையோர் கல்லூரிக் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று 30-04-2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
மானிப்பாய். (சி-42482)(26-14-45) - அதிபர்.



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
தொண்டர் சபை

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: தொண்டர் சபைக்காரியாலயம்
காலம்: 01-05 2005 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி

*குறிப்பு:* வருடாந்த உற்சவம், புதிய நிர்வாகத் தெரிவு உட்படப் பல விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்படவிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி தவறாது சமுகந்தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(44585)(26-14-45) - தொண்டர் சபை அங்கத்தவர்கள்.


## மலசலகூடப் பராமரிப்பு அபிவிருத்தி சபையிடம்

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் அமைக கப்பட்டுள்ள மலசலகூடங்களைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அனுசரணையுடன் ஒழுங்கான முறையில் பராமரித்துப் பயனபடுத்தவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபருடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மேற்படி வலயப் பாடசாலைகளில் மலசலகூடங்கள் மாணவர்களால் உரியமுறையில் பராமரிக்கப்படுவதில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் -

மலசலகூடங்களைப் பாடசாலை அபிவிருத்திச் சபையினரின் அனுசரணையுடன் பராமரிக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் எனவும் - கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(3-152)


## Study In London

லண்டனில் இருந்து இலங்கை வந்திருக்கும் யாழ். மாணவர்களினால் லண்டன் பல்கலைக்கழக அனுமதி நேரடியாகப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

பயண முகவர்களிடம் ஏமாற்றமடையாமல் நேரடியாகப் பல்கலைக்கழக அனுமதிபெற ஆலோசனை வழங்கப்படுகிறது.

**T.P. 077 6176476**
**UNIVAC** (யுனிவெக்),
இலங்கை வங்கி அருகில்,
சங்கானை.
(44566)



## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலத்தைத் தமிழிலும் தமிழை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கக்கூடியவர் தேவை. தகைமையுடையோர் கீழ்தெரிவிக்கும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும். சம்பளம் தகைமைக்கமைய வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**ஆளணி நிர்வாகப் பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
கந்தசுவாமி கோயில் அருகில், கிளிநொச்சி.
(26-14-45) (சி-42485)



## உடனடியாக விற்பனைக்குண்டு

- 24 அடி நீளமும் 12 அடி அகலமுமுடைய வியாபார நிலையம் ஒன்றுக்கு அதன் 3 பக்கங்களுக்கும் பொருந்தக்கூடிய தேக்கு மரத் தளபாடங்கள் (யாவும் புத்தம் புதியன).
- வீடு ஒன்றில் இருந்து கழற்றி எடுக்கப்பட்ட கதவுகள், யன்னல்கள் (கிறிலுடன்), கோப்பிச மரங்கள், தீராந்திகள் (யாவும் முதிரை, பாலை, வேம்புப் பலகைகளால் வடிவமைக்கப்பட்டவை).

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

K.ஹரிதாஸ்,
C/o: கு.பிறைசூடி,
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.
T.P.: 0777 246163 Or 0779037206

Or

காந்தரூபன் (சிறி)
ஹோட்டல் ஜொலி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P.: 0777040752.

Or

சு.நவரத்தினம்
நவம் களஞ்சியம்
பஸ் நிலையம் (பின்புறம்), சாவகச்சேரி.
(44510)(26-14-45)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மட்டுவில் கண்ணகை சனசமூக நிலையத்தினரால் 23-04-2005 அன்று நடத்தப்பட்ட பங்குனி உற்சவகால அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 2170
இரண்டாம் பரிசு இல. 3648
மூன்றாம் பரிசு இல. 2985

*10 ஆறுதல் பரிசில்களுக்குரிய இலக்கங்கள்:*
76, 1017, 3242, 879, 2127, 4777, 437, 2784, 2847, 1110

பரிசிலுக்குரியவர்கள் கண்ணகை சனசமூக நிலையம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு 23-05-2005ஆம் திகதிக்கு முன்னர் பரிசிலினைப் பெற்றுக்கொள்ளவும். மேலும் நிதி வழங்கி ஆதரவு நல்கிய அனைத்து நலன்விரும்பிகளுக்கும் எமது நன்றிகள். - நிர்வாகம்.

விளம்பர அனுசரணை:
**ராஜா பல்பொருள் வாணிபம்,**
புத்தூர் வீதி, அம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு.
(44606)(26-14-45)



## BLACK & DECKER
வீட்டுப் பாவனைப் பொருட்கள்




make it your own home
உங்கள் இல்லத்தின் உடமையாக்குங்கள்

DELMEGE GENERAL EQUIPMENT
DELMEGE
இடமிருந்து

நாடெங்கிலுமுள்ள காட்சியறைகளிலும் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்

### டெல்மேஜ் காட்சியறைகள்

கொழும்பு
482/1A, ரி. பி. ஜயா மாவத்தை
கொழும்பு 10.
தொ.பே: 2665913

மொரட்டுவை
192A, டி சொய்சா வீதி.
மொரட்டுமுல்ல, மொரட்டுவை
தொ. பே: 2654603

குருணாகல்
137, புத்தளம் வீதி.
குருணாகல்
தொ. பே: 037-2234386

அக்குரஸ்ஸ
121A, தெனியாய வீதி
அக்குரஸ்ஸ
தொ. பே: 041-2283322

அனுராதபுரம்
92, பாங்க் பிளேஸ்
அனுராதபுரம்
தொ. பே: 025-226371


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
| --- | --- | --- |
| 23 - 07 - 1950 |  | 05 - 05 - 2004 |

### திருமதி சோதிமலர் அரியராசா

காலங்கள் கடந்தாலும் இங்கே
கலையவில்லை உங்கள் நினைவுகள்!
ஓராண்டு ஆனாலும் ஓராயிரம் ஆண்டு
ஆனாலும் அடங்கவில்லை
உங்கள் பிரிவுத்துயர்!
கண்ணயர்ந்து போனாலும்
எங்கள் மனக்கண்முன் நிழலாடுது
அன்பு உருவம் எங்கள் மூச்சுள்ளவரை
உங்கள் நினைவின்றி வேறில்லை.

உங்கள் நினைவுகளோடு வாழும்:
கணவர்: ச.அரியராசா S.A. உரிமையாளர்,
பிள்ளைகள்: விநோதரன், ஜெசிதரன், ஜெனோதரன்.
கோப்பாய் மத்தி.
(44570)(26-14-45)

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி தெட்சிணாமூர்த்தி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி தெட்சிணாமூர்த்தி அவர்கள் 22.04.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் குமாரு தம்பதிகளின் அன்பு மருமகளும் தெட்சிணாமூர்த்தியின அன்பு மனைவியும் கிருபாரதி, சிவகுமார் (பிரான்ஸ்), ரமேஸ்குமார் (இந்தியா), நர்மதா ஆகியோரின் அன்புத் தாயாரும் குகேந்திரகுமாரின (சிவசக்தி ரேடேர்ஸ், கிளிநொச்சி) அன்பு மாமியாரும் டிசாந்தகுமாரின் அன்புப் பேர்த்தியாரும் பரமேஸ்வரி, தனலக்சுமி, வசந்தநாதன (பிரான்ஸ்), ரகுநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசதுரை, காலஞ்சென்ற இராசன் மற்றும் குணம், இந்திரன் (ஜேர்மனி), விஜயலக்சுமி, தங்கராசா, மணிமேகலை ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுவேதா, சிந்துஜா, மதுசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் லக்ஷிதா, கஜலக்ஷன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.39, உதயாநகர், கவியா காலனி, போரூர், சென்னை 600116 இல் நடைபெறும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வசந்தன் (பிரான்ஸ்)
(சகோதரன்)
T.P.: 0033-153260323

(44605)(42-14-45-26)

# பஸ்ஸுடன் நடத்துநரும் எரிக்கப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரி சிக்கினார்!

கந்தானை, மாபொல பகுதியில் தனியார் பஸ் ஒன்றுக்குள் இருந்த நடத்துநரொருவர் அந்த பஸ்ஸோடு சேர்த்து உயிரோடு எரிக்கப்பட்ட கொடூரமான சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படுபவர் நேற்றுமுன்தினம் கந்தானைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதனையடுத்துத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வேலைநிறுத்தப் போராட்ட அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காகத் தீவிர பிரயத்தனத்தில ஈடுபட்டிருந்த பொலீஸார் நீண்டவிசாரணைகளின் பின்னர் முக்கியமான குற்றவாளியைக் கைது செய்திருக்கின்றனர். இதற்காகப் பொலீஸார் 65 பேரைக் கடும் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். கைதுசெய்யப்பட்ட நபர் ஓட்டோ ஒன்றின் சாரதியாவார். சம்பவம் நடைபெற்ற தினம் அதிகாலை வேளையில் மேற்படி தனியார் பஸ் வண்டியும், ஓட்டோவும் சிறு விபத்திற்குள்ளாகின எனக் கூறப்படுகின்றது. இதனால் ஆத்திரமடைந்த ஓட்டோச் சாரதி பின்னர் பஸ்ஸை பெற்றோல் ஊற்றி எரித்தார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்ததாக கந்தானைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெகடர் அபேகுணவர்தன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் பல சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்குத் தேவையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த பஸ் எரிப்புச் சம்பவத்தில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதையடுத்து ஏற்கனவே திட்டமிட்டிருந்த - நாடளாவிய ரீதியிலான - தமது வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

இதற்கிடையே மரணமடைந்த பஸ் நடத்துநரின் இறுதிச்சடங்கு நேற்றுமாலை இரத்தினபுரியில் இடம்பெற்றது.

இவரின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (எ-க-12)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம்

**அவசர கலந்துரையாடல்-2005**

காலம்:27.04.2005 புதன்கிழமை
காலை 9 மணி
இடம்: புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
- செயலாளர்
(44629)(11-12-30)

## மெய்வன்மைப் போட்டி கலந்துரையாடல்

யாழ். கல்விவலய மெய்வன்மைப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்விவலய கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் மெயவனமைப் போட்டிக்கான பொறுப்பாசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-12)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ரஜனி, நயன்தாரா. பிரபு. ஜோதிகா.
வடிவேல்
நடித்த

காட்சிகள்
11.00.
3.00.
7.00
10.00.
(பு.நே.)
(சில்ஸ்)

ராஜா யாழ்ப்பாணம்
கடைசிவாரம்
கமலஹாசன், மனீஷா கொய்ராலா, வையாபுரி,
நாசர் நடித்த
மும்பை X பிரஸ்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே)
விரைவில் 4 ஸ்ருடன்ஸ்

நாதன்ஸ் சினிமா
யுவராஜ், சங்கீதா, விவேக் நடித்த,
தகதிமிதா
கா.நேரம்:
10.30.2.30. 6.30. 9.30 (பு.நே.)
(C/41486)
(58-11-45)

# சந்திரிகாவுக்கு நெருங்கியவர் எஸ்.பி.திஸநாயக்கவுடன் பேச்சு

கொழும்பு,ஏப்.25

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்கவை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நெருக்கமான முதலமைச்சரொருவர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சிறைக்காவலில் இருக்கும் எஸ்.பி. திஸநாயக்க தற்போது சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு தேசிய வைத்திசாலையில் வர்த்தக வார்ட் பிரிவில் தங்கியிருக்கிறார்.

முதலமைச்சருடனான இந்தச் சந்திப்பில் முககியமான அரசியல் விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டபோதிலும், அவற்றைக் கூறுவதற்கு எஸ்.பிக்கு நெருக்கமான வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

முள்ளந்தண்டு வலி காரணமாக அவஸ்தைப்படும் எஸ்.பி.திஸநாயக்கவிற்கு அடுத்தவாரம் சத்திரசிகிச்சையொன்றும் நடைபெறவுள்ளது.(எ-க)

# சோதனைச் சாவடி தடுப்புடன் மோதி வர்த்தகர் உயிரிழப்பு!

## மட்டக்களப்பு ஊறணியில் சம்பவம்

மட்டக்களப்பு ஊறணி சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவமொன்றில் ஒருவர் அதே இடத்தில் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபல வர்த்தகரான கோவிந்தராஜ் என்பவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைககிளில் சென்று கொண்டிருந்த இவர்கள் ஊறணி சோதனைச்சாவடியில் வைக்கப்பட்டிருந்த இரும்புத் தடுப்புகளுடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலீஸார், நீதிவான் விசாரணைகளின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைத்தனர். மட்டக்களப்பு பொலீஸார் இந்த விபத்துப் பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-க)

## முதலாவது திருப்பலி

யாழ். மரியன்னை பேராலயத்தில் கடந்த சனிக்கிழமை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் புதிய குருக்களில் ஒருவராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்கைச்சேர்ந்த அருட்திரு. இயேசுதாசன் மதி இளம்பருதி அடிகளார் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தமது முதலாவது திருப்பலியை நிறைவேற்றவுள்ளார். (எ-51)

மனோகரா யாழ்ப்பாணம்
விஜய், ஹரிணி,
வடிவேல்
நடித்த
சச்சின்

காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

## கலாசாரப் பேரவை கலந்துரையாடல் நாளையே நடக்கும்

யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. நாளை நடைபெறும் கலந்துரையாடலில் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொளளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)

## மலேசிய முன்னாள் பிரதமர் மஹதிர் இன்று வருகை

கொழும்பு,ஏப்.25

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு மலேசிய முன்னாள் பிரதமர் டாக்டர் மஹதிர் முஹம்மட் இன்று கொழும்பு வரவுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியில் மலேசியாவின் அனுபவங்கள் எனும்தலைப்பில் விசேட சொற்பொழிவொன்றையும் அவர் ஆற்றவுள்ளார். முகாமைத்துவ மற்றும் கணக்கியல் பட்டய நிறுவனத்தின் (சீமா) வருடாந்த மாநாட்டையொட்டி இந்தச் சொறபொழிவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிகெட் அணி முன்னாள் தலைவர் இம்ரான்கானும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார். (எ-க)

## மே தினம் குறித்து கோப்பாயில் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

மே தினம் தொடர்பாக கோப்பாய்ப் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு ஒன்று, இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினர், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என கோப்பாய்ப் பொது அமைப்புக்களின் ஒன்றியம், மே தின ஏற்பாட்டு குழுவும் கேட்டுள்ளன. (எ-190)

யாழ்.றோட்டறிக் கழகம்
இளங்கலைஞர் மன்றத்தின் அனுசரணையுடன்
நடத்தும் புத்தாண்டையொட்டிய
இசை அமிர்தம்
இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.
காலம்: இன்று 25.04.2005 மாலை 6.00 மணி

ஸிதார் இசைக் கச்சேரி
ஸிதார்: தென்னிந்திய பிரபல ஸிதார் வித்துவான்
திரு.பகவராஜு சிவராமகிருஷ்ணன்
அணிசெய் கலைஞர்கள்:
வயலின் - இசைஞானதிலகம் R.இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் - சங்கீதரத்தினம் M.சிதம்பரநாதன்
தபேலா - வித்துவான் S.சிவராமன்
கெஞ்சிரா - செல்வன் V.ரமணன்
கடம் - செல்வன் N.மாதவன்
முகர்சிங் - செல்வன் N.சதீஸ்குமார்

ஸக்ஸ போன் இசைக் கச்சேரி
ஸக்ஸபோன்: தென்னிந்திய பிரபல ஸக்ஸபோன் வித்துவான்
திரு. கோபாலகிருஷ்ணன் இராமநாதன்
அணிசெய் கலைஞர்கள்:
வயலின் - இசைஞானதிலகம் R.இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் - சங்கீதரத்தினம் S.மகேந்திரன்
கடம் - செல்வன் மகேந்திரன் லோகேந்திரன்
கெஞ்சிரா - செல்வன கிருபா அனந்தகோபன்
தபேலா - செல்வன் S.விமல்சங்கர்
முகர்சிங் - செல்வன் K.நந்தகுமார்
(கட்டணமற்ற நிகழ்ச்சி)
நிகழ்ச்சி இணைப்பாளர்
Rtn.லோ.துஷிகரன்.
(சி-42500)(11-12-30)

UNIT
எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
UNIT OFFER நீடிக்கப்பட்டுள்ளது
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணனியுடனும்
COMPUTER TABLE/PRINTER/
SCANNER/UPS and Filter Glass,
Dust Cover & Mouse Pad Totally Free
ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்
Possible which impossible
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

VACANCY
IIS City Campus is a pioneer in providing higher education to people of Jaffna. Current programs being run at IIS City Campus are Higher National Diploma (3 streams) from *EDEXCEL –BTEC, UK*, Bachelor of Information Technology from *University of Colombo, Sri Lanka* and Master of Business Administration from *Sikkim Manipal University, India*. IIS was founded in 1996. In the past ten years it has grown in to a great education group running many advantageous programs.
IIS is looking for a suitable qualified candidate
for the position of
CENTRE MANAGER
The ideal candidate should have be a
✓ Age limit – 25 – 40
✓ MBA graduate or Post graduate with related work experience
✓ Experienced person in IT field
✓ Ability to manage multi programs
✓ Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment
✓ Motivated, flexible and capable of working under pressure
✓ Perform any other duties if required
✓ A strategic clear and conceptual thinks who can convert concepts and ideas into operational terms
✓ Fluency in English and corresponding ability in this language is a must
✓ Communication skills, Organisation skills and crisis management are essential
✓ Ability to work in team
The suitable candidate will be offered competitive salary with additional benefits
Please send your application on or before 29th April 2005
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P No. : 021 222 8060



# மட்டக்களப்பு துப்பாக்கிச் சூட்டில் தர்மகர்த்தா உட்பட 4பேர் காயம்

## ஒருவர் முன்னாள் புலனாய்வாளர்

ஏறாவூர். ஏப்.25

மட்டக்களப்பு. ஆனைப்பந்தியில் இனந் தெரியாதநபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் இலங்கைப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் தரும் முன்னாள் உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

புளியந்தீவு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவத் திருவிழாவின்போது இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. தீர்த்தமாடுவதற்காக மாமாங்கப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் குளம் நோக்கி சுவாமி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகையில் 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரி இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டார் என்று பொலீஸார் கூறினர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள்:- இராஜமாணிக்கம் மதியழகன்(வயது-31) இராணுவப் புலனாய்வுத்துறையின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படுகின்றது. மட்டு. சிறைச்சாலை உத்தியோகத்தரும், ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவருமான இராஜரட்ணம் இராஜசேகரன் (வயது - 31) என்பவரும், மட்டு. வின்சன்ட் கல்லூரி மாணவிகளான ரவிச்சந்திரன் சுகன்யா(வயது - 13), ஜெகநாதன் நித்திய நந்தனா(வயது - 22) ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணம் எதுவும் உடனடியாகக் கண்டறியப்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக நேற்று மாலை வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-க-12-190)



மட்டு. நகர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மாணவி ஒருவர், மட்டு. ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது...

# ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

கிளிநொச்சி.ஏப்.25

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாளை செவ்வாய்க்கிழமை நடத்தவிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை. செய்திக்குறிப்பு ஒன்றின் மூலம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொதுக்கட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு குறித்து இந்தச் சந்திப்பில் விளக்கப்படவிருந்ததாகத் தெரியவந்துள்ளது. (எ-12)

வெடிவிபத்தில் சாவடைந்த கப்டன் ரகுமதியின் வித்துடல் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது...

# வெடிவிபத்தில் போராளி சாவு!

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்துச் சம்பவம் ஒன்றில் போராளி ஒருவர் சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் ரகுமதி அல்லது திருமகள் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சொந்த முகவரியாகவும் ரவிகடை, வேப்பங்குளம், வவுனியா மற்றும் பிள்ளையார் கோவிலடி, செம்பன்குன்று முகாம், மன்னார் ஆகிய இடங்களைத் தற்போதைய முகவரியாகவும் கொண்ட கமலேந்திரன் ஜோதிகா என்ற போராளியே சாவடைந்துள்ளார் எனப் புலிகள் அறிவித்துள்ளனர். (எ-12)

# மேல்மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர்கள் இதில் சில தீர்மானங்களை எடுத்துள்ளனர். எவ்வாறாக இருந்தாலும் தவறு ஒன்றுக்கு நாம் நிச்சயம் துணைபோகமாட்டோம். எமது கட்சியின் கொள்கைத் திட்டத்திற்கமையவே நாம் செயற்படுவோம். இதில் மாற்றமில்லை - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)

# மே மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினார். இந்த நிலை விடுதலைப் புலிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக அதன் சமாதானச் செயலக பணிப்பாளர் தெரிவித்தார்.

இத்தகையதொரு நிலையிலேயே மே மாத இறுதிக்குள் பொதுக்கட்டமைப்பு செயற்பட ஆரம்பித்துவிடும் என்று சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய இராஜதந்திரி ஒருவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

சொல்ஹெய்மின் கடந்த வார விஜயம் இந்தத் திட்டத்தை மேலும் முன்னகர்த்தியுள்ளது என்றும் அந்த இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஆழிப் பேரலைப் பேரழிவு ஏற்பட்டு 6 மாதங்கள் கடக்கும் நிலையில் நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு இயங்க ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் (அரசு,புலிகள்) எதிர்பார்க்கிறார்கள். - என்றும் அந்த இராஜதந்திரி மேலும் கூறினார். (எ-க)

# வெள்ளை வானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான இளைஞர்கள் நள்ளிரவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

துரைராஜா அன்ரன் ஜீட் (வயது 18, முள்ளி வீதி, அரியாலை), சிங்கராஜா அமலதாஸ் (வயது 20, கச்சேரியடி, யாழ்ப்பாணம்), திரவியம் சின்னத்தம்பி (வயது-19 முள்ளியவளை, முல்லைத்தீவு) ஆகியோரே இவ்வாறு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கழுத்து, கை, கால், தோள்மூட்டு ஆகிய பகுதிகளில் பலத்த வெட்டுக் காயங்களுக்கு இலக்கான இவர்களுக்கு ஆஸ்பத்திரியின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் பின்னிரவு தெரிவித்தன.

இதற்கிடையில் -

நேற்று முன்னிரவு யாழ். இராசாவின்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் இருவர் பலத்த வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர்.

செல்லப்பா சுகுமார் (வயது 38, யாழ். மடத்தடி), சிவசாமி விஜயபாஸ்கரன் (வயது 35, யாழ். ஆஸ்பத்திரி வீதி) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். தலை, முகம் மற்றும் கை பகுதிகளில் இந்த இருவருக்கும் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. (எ-12)

# ஜே.வி.பியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குத் தாம் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை என ஜே.வி.பியினர் அறிவித்திருப்பதால் மிகவும் ஆத்திரமுற்றிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க இன்றைய சந்திப்பில் ஜே.வி.பியினருக்கு முக்கியமான அறிவுரைகளையும், கூட்டுப் பொறுப்புத் தத்துவத்தையும் விளக்குவாரென்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் நேற்று உதயனுக்கு உறுதியாகத் தெரிவித்தார். இன்றைய கலந்துரையாடலில் ஜனாதிபதி தமது கடுமையான போக்கை வெளிப்படுத்துவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே, இது முக்கியமானதாக அமையுமென்பதால் நாளைய சபை விவாதம் குறித்துக் கவலையடையத் தேவையில்லையென்று கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. ஆதரிப்பதாகத் தெரியவந்துள்ளது. இது கூட்டமைப்பின் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் முரண்பாடானது. எமது பக்கம் பிரச்சினைகள் இருக்குமாயின் அதனை முதலில் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும் அதை விடுத்து குறுக்குவழியில் அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியை நான் கண்டிக்கிறேன்.

மேல் மாகாணசபையைப் பொறுத்தவரை அங்கு எனது செயற்பாடுகளுக்குத் தடைவிதிக்கும் வகையிலான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கூட்டணிக் கட்சிகளின் இத்தகைய செயற்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவே அமையும். இவ்வாறான சூழ்நிலையில் இன்று நடைபெறும் பேச்சின்போது ஜனாதிபதி இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பார்.

- இவ்வாறு மேல் மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-க)


கீல்வாத மூட்டு வீக்கம்

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்தமுடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website: www.fppvtl.org
A BOI Approved & ISo 9001:2000 Qms Certifed Company
(சி-41632)(29-14-17)

கருத்தரங்கு
APRIL 27 8.00-2.00
A/L 2005 Part 2
கணக்கீடு
திரு. பாலவாசன்
சிவனி மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்கு கொள்ளலாம்
விக்னை
கல்வி நிறுவனம்

Bachelor of Information Technology
BIT
கல்வியாண்டு 2005/2006
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மேற்படி வெளிவாரிப் பட்டக்கல்விக்கான தெரிவுப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- இவ்வாண்டில் கற்கை நெறி முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளது
- இக்கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள்
- A/L 2005 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களும் இத் தெரிவுப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.
BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P : 021 222 8060

ஏசியன் தளபாட நிலையம்
கிச்சின் கபேட் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும் (பன்றிக் கபேட்)
ஆர்பிக்கோ, தம்ரோ, நில்கமல் கதிரைகள், மெத்தைகள் மற்றும் அலுவலகத் தேவைக்குரிய அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
133, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம். T.P: 0777 536108


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.